பழநி, S. முஹம்மது ஹுஸைன் நயினர்

நூலாசிரியர்

SIDAK-KADI VALLAL

COMPILED BY

Dr. S. MUHAMMAD HUSAYN NAINAR B A (Madras)
M A, LL B (Aligarh) Ph D (London)

rofessor, Head of the Department of Arabic, Persian and Urdu
University of Madras

Published by

Mrs Sultana Abdullah, M A, B T

95, San Thome High Road
Mylapore, Madras-4.

1953 Price Rs. 5

First Edition 1953

This book should not be reproduced either in part or in whole without permission in writing from the author or the publisher except in the case of reviews where extracts can be made

Printed at the Nuri Press, Ltd
54 Main Road, Royapuram, Madras

Copies can be had from

S VASAN COMPANY

MYLAPORE, MADRAS-4.

TO

MY MOTHER

PREFACE

The volume presented now to the public with the title *Sidak-kadi Vallal* comprises *Sidak-kadi Varalaru*[1] *Seydak-Kadiru Marakkayar Tirumana Vazhtu*[2] and a revised edition of *Seydak-kādi Nondi Natakam*[3] and *Sidak-kadi Peril Tanip-padalgal.*[4]

In the course of recounting the life of *Sidak-kadi*, trade relations between South India and Arabia are traced back to ancient times, besides giving indications of the migration of Muslims from Middle-East countries to the Indian peninsula in different periods since the birth of Islam in Arabia.

Islam, from the very beginning of its contact with South India, was inter-related with economic, political, religious and other factors in the region of the Tamils. It continues to reflect local political, and cultural conditions.

---

1. *Sidak-kadi Varalaru;* Biography of Sidak-kadi in Tamil written by the author. Sidak-kadi is the corruption of the Arabic name Shaykh 'Abdu'l-Qādir. This name is also pronounced by the Tamils as Seydak-kadi, Seyda-kadi, Sidak-kali and Seydak-kadiru.

2. Poetical composition in Tamil in praise of Sidak-kadi on the occasion of his wedding. Edited with critical introduction and notes by the author.

3. Mono-drama in Tamil in praise of Seydak-kadi, Edited with critical introduction and notes by the author.

4. Tamil poems celebrating generosity and high-mindedness of Sidak-kadi, Edited by the author,

Sidak-kadi (Shaykh 'Abdu'l-Qādir) who flourished as a merchant prince in Kilakkarai, Ramanathapuram District, Madras State in the latter half of the seventeenth century, is a true representative of the Hindu-Muslim culture, personifying the correct relations between the two great communities in South India especially in the Tamilnad. He points out the way for inter-cultural relations generally for all times. A cursory glance over these pages will reveal what a jewel of a man Sidak-kadi was and how the spirit of generosity and liberality shone through him.

The classical traditions of Hindus and Muslims, which had on the whole tended to the unity of each of these communities within itself, and had, as between the two communities evolved a method of approach, through seven centuries of contact and conflict before the advent of the Europeans, underwent a great change with the territorial expansion of the East-India Company. The establishment of the British-Raj encouraged the rise, economic and cultural, of newer classes more amenable to British influence and more docile to its way of thinking.

Now India is free and there is no ground for despair. It is up to us to re-discover the old standards of friendship and cordiality. The publication of the life of such an eminent personality like Sidak-kadi will, it is hoped, serve as a shining light to guide people and help them to bring about a golden age of union and harmony among the different communities in our country.

My thanks are due to my daughter Miss Rayhana Nainar, B.A. for her tireless patience and labour in assisting me in the publication of this work.

University of Madras,
MADRAS,
15th April, 1953.

S. MUHAMMAD HUSAYN NAINAR

முகவுரை

அறபுநாட்டில் கி. பி. ஏழாமநூற்ருண்டில் தோன்றிய இஸ்லாம நாளடைவில் அகிலஉலகிலுமபரவலாயிற்று; செனற இடங்களிலெல்லாம, தன்னுடைய அடிப்படைக் கொள்கை களுக்கு முரண்படாமல் அந்தந்த நாடுகளில வழக்கத்தில் உள்ள சமயக்கொள்கைகளோடு பழகி ஒருபபட்டு, அன்பையும் சகோதரத்துவத்தையும் பரப்பி, புதிய ஞானசூரியனுகவே விளங்குகின்றது. ஆதலின, இஸலாமிய கலாசாரததை இவ் வுலகில் வழங்குகினற மொழிகள அனைத்துமஏறறுக்கொண டிருக்கின்றன.

அபபடி ஏற்றுக்கொண்ட மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று. இம்மொழியில் தமிழ்முஸ்லிம்புலவர்கள் பலர் இஸ லாமியக்கருத்துக்களையும் தத்துவஙகளையும் அமைத்து இயல், இசை, நாடகம என்ற முத்தமிழத் துறைகளிலும தமிழ அன்னைக்கு அணிகள் பல செயது அணிந்தனர். அவர்கள் இயற்றிய நூல்களில் புதிய சமயக் கருத்துக்களும அக் கருத்துக்களைக் குறிக்கின்ற அறபி, பாரஸிச் சொறகளும கலந்து வந்துள்ள காரணத்தால் ஹிந்துக்களும முஸலிமகளில் பலரும் அந்நூல்களைப் போறருது விட்டுவிட்டனர். ஆயினும், சில புலவர்கள தாங்கள அந்நூலைப் படித்து ரஸித்ததோடு பிறரையும படிக்கத் தூணடினுர்கள்.

அத்துறையில் இருமொழிப்புலவரும தமிழத்தாய்க்குப் பாட்டாலும் உரையாலும் தொணடுபுரிந்துவருபவருமான இராமநாதபுரம் மகாவித்வான ராவ்சாகிபு மு. இராகவையங்கார் அவர்கள் தமிழலெக்ஸிகன் ஆபீஸில் வேலை பார்த்துவந்த போது தமிழமுஸலிம் புலவர்கள எழுதிய நூல்களைப் படித்துப் போறறி அவறறைத தமிழஉலகிறகு வெளியிட்டுதவ எண்ணி ஞர்கள. இஸ்லாமியக் கொளகைகளும கருத்துக்களும் அறபி பார்ஸிச் சொறகளும அந்நூல்களில இடையிடையே கலந்து வந்துள்ளதனுல ராவ்சாகிபு அவர்கள அந்நூல்களைப பதிப பிக்காமல எனனை அனபோடு அணுகி, "உங்கள சமய

நூல்கள் பல தமிழில் உள்ளன. அவை படிப்பாரின்றி, செல்லரித்துப் போகின்றன. அவற்றின் கருத்துக்களும் சுவைகளும் சிறப்பு வாய்ந்தவை'' என்று கூறி, அந்நூல்களுட் சிறந்த சீறாப்புராணம், சீதக்காதி நொண்டி நாடகம் முதலிய நூல்களின் சுவையை எனக்கு ஊட்டினார்கள். ராவ்சாகிபு அவர்கள் ஊட்டிய சுவையும் ஊக்கமுமே, அறபி, பார்ஸி, உறுது இம்மொழிகளின் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த என்னை இத்துறையிலும் இறங்குமாறு செய்தன. பின்பு அந்நூல்களை முறையே படித்து ஆராய்ந்து குறிப்பெழுதித் தமிழுலகிற்குத் தரவேண்டுமென்று எண்ணி, முதன்முதலாக 1939–ஆம் ஆண்டின் இறுதியில் சென்னைப் பல்கலைக் கழகப் பதிப்பாக சீதக்காதி நொண்டி நாடகத்தை வெளியிட்டேன்.

அந்நாள் முதல் சீதக்காதியின் வாழ்க்கை வரலாற்றை ஒரு நூல்வடிவத்தில் எழுதவேண்டுமென்ற அவா எனக்கு அதிகரித்துவந்தது. அதன் சம்பந்தமாகப் பல இடங்களுக்குச் சென்று விவரந்தெரிந்த பெரியோர்களிடமும் நண்பர்களிடமும் விசாரித்து விஷயங்களைச் சேகரித்துவரும்பொழுது, முன்பு பதிப்பித்த நொண்டிநாடகத்தில் விடுபட்ட சொற்களும் கண்ணிகளும், சீதக்காதிபேரில் பாடப்பட்ட தனிப்பாடல்களுட் சில பாக்களும், சீதக்காதி பேரில் பாடிய திருமண வாழ்த்து என்ற ஏட்டுப் பிரதியும் கிடைத்தன. திருமணவாழ்த்து ஒரு பிரதியே கிடைத்தது; அதிலும் சில ஏடுகள் இல்லை. இருந்த ஏடுகளிலும் பல விடங்கள் பிழைபட்டிருந்தன. அவற்றின் உண்மைப்பாடங் காண்டல் மிக அரிதாயிருந்தது. பலமுறை ஆராய்ந்தும் இன்னும் ஒரு சிலவிடங்களில் பாடம் திருத்தமுறவில்லை. இந் நிலையில் அதைப் பதிப்பித்தல் தகுவதன்று என்பதை அறிவேனாயினும் இப் பிரதியும் அழிந்துபோகலாகாதே என்றெண்ணிப் பதிப்பிக்கலாயினேன். இனி ஒன்றிரண்டு பிரதிகள் கிடைத்தால் நூல்முழுவதும் சுத்தபாடத்தோடு வெளியிடப்படும்.

மேற்கூறிய நூல்கள் முதலியவற்றைப் புதிதாகப் பதிப்பித்து, சீதக்காதியின் வாழ்க்கை வரலாற்றைப் பல ஆதாரங்களைக்கொண்டு யான் ஆராய்ந்தஆராய்ச்சி நூலையும் சேர்த்து

ஒன்ருகத் திரட்டி, சீதக்காதி வள்ளல் என்னும் பெயரால் இந்நூலை வெளியிட்டிருக்கிறேன்.

எனது ஆராய்ச்சியோடு கூடிய இப்பதிப்பே முடிவான தல்ல. இதில் பல பிழைகள் இருக்கலாம்; கருத்து வேறு பாடுகளும் இருக்கலாம். இந்நூலைப் படித்துணரும் தமிழ் அறிஞர்கள் நூல்சம்பந்தமான செய்திகளை எடுத்துக்காட்டு வார்களானுல், அவர்கள்பால் பெரிதும் நன்றியுடையவனு யிருப்பேன்.

சீதக்காதி வள்ளல் என்ற இந்நூலில் அடங்கிய திரு மண வாழ்த்து, நொண்டிநாடகம் ஆகிய நூல்களைப் பதிப்பிக்க எனக்குப் பல வழிகளில் உதவி புரிந்த பன்மொழிப் புலவர், இலக்கணவித்துவான், V. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர் கட்கும், மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதரும், சென்னைப் பல்கலைக்கழகத்து ஆராய்ச்சியாளருமான B. R. புருஷோத்தம நாயடு அவர்கட்கும் என்றும் குன்ருத நன்றியுடையேன். திருமண வாழ்த்தின் ஏட்டுப்பிரதியை யான் பெயர்த்தெழுதிய காலமுதல் அச்சாகும்வரை நண்பர் ரெட்டியார்அவர்கள் அவ் வப்போது வேண்டிய உதவியைத் தளராமல் முழுஅன்புடன் செய்துவந்தார்கள். அங்ஙனமே புருஷோத்தமநாயடுஅவர் களும் எப்பொழுதும் உதவிபுரிந்துவந்தார்கள். இவ்விருவர் உதவியால்தான் திருமண வாழ்த்து அச்சுவாகனம் ஏற முடிந்தது என்ருல் மிகையாகாது.

நொண்டி நாடகத்தின் இலக்ஷணம் இன்னதென்று விளக்கிக்காட்டி, கண்ணிகளில் இசையமைப்புப்படி சீர் பிரித்து உதவிய இசைநூல்வல்லுநரும் பேராசிரியருமான P. சாம்ப மூர்த்தி அய்யர்அவர்களுக்கு என் நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பதிப்புவிஷயத்தில் ஒப்புநோக்குதல் முதலிய உதவி களைச் செய்த உடுமலைப்பேட்டை போர்ட் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் வித்வான் K. நயினுர் முகம்மது அவர்களுக்கு நன்றிசெலுத்துகின்றேன்.

1939-ஆம் ஆண்டில் யான் வெளியிட்ட சீதக்காதி நொண்டி நாடகம் என்ற நூலுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேறு

பிரதி கிடைக்கவில்லையே என்று ஏங்கியிருந்தபொழுது, அனபர் காலஞ்சென்ற பழநி வழக்கறிஞர் K. சிவலிங்கம் பிளளை B.A.,B.L. அவர்கள கோவை ஜில்லா, கணியூர் அல-ஹாஜ T. K. ஹனிப சாகிபு அவர்களிடமிருநது ஓர் பிரதியை வாங்கி அனுபபினார்கள. அப்பிரதி மிகவும பயனபட்டது. அவர்கட்கு என நன்றி உரியதாகும்.

இந் நூலிற் சேர்ப்பதறகாக, கீழக்கரையிலுள்ள கட்டடம முதலியவற்றைப் பாாத்து நனருகப படம எடுத்து உதவிய முஹம்மது முஹிய்யுத்தீன, B. Sc., ஆதமஷாஹ் இவர்களிருவரிடத்தும், அபபடங்களை அழகாக அச்சிட்டுத்தந்த சென்னை ராயல் பிரிண்டிங ஒர்க்ஸ தலைவரிடத்தும மிக்க நனறியறிதலை உடையேன.

சென்னை
15-4-53

S. முஹம்மது ஹுஸைன் நயினார்

சீதககாதி நொண்டி நாடகததிலும திருமண வாழததிலும,

○ இவ வடையாளம பொருள எழுதபபட்டுள்ள அறபி முதலிய மொழிகளின அருஞசொறகளையும,

* இவ வடையாளம சிறுகுறிபபு எழுதப்பட்டுள்ள பதயகளையும குறிககும,

சீதக்காதி வரலாறு

ஆசிரியர்

S. முஹம்மது ஹுஸைன் நயினார்

பி. ஏ. (மதராஸ்), எம். ஏ., எல் எல். பி. (அலிகார்), பிஹெச். டி. (லண்டன்)

பேராசிரியர், அறபி, பார்ஸி, உறுது பகுதியின் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்

வெளியிட்டவர்

Mrs. சுல்தானா அப்துல்லாஹ், எம். ஏ., பி.டி.

95, சான்தோம் பெரியசாலை

மயிலாப்பூர், மதராஸ்—4

பதிப்புரிமை] 1953 [விலை ரூ. 5

முதற் பதிப்பு 1953

நூரி பிரஸ்
54, மெயின் ரோடு
இராயபுரம், மதராஸ்

புத்தகம் கிடைக்கும் இடம்
எஸ். வாஸன் கம்பெனி
மயிலாப்பூர், மதராஸ்

உள்ளுறை

		பக்கம்
PREFACE		
முகவுரை		
சீதக்காதி வரலாறு		
முன்னுரை	...	i—ii
தோற்றுவாய்	...	3—10
சீதக்காதியின் ஊர்—காயல்	...	11—13
காயலில் முஸ்லிம்கள்	...	14—16
காயல்துறையில் முஸ்லிம்களின் மாண்பு	...	17—18
புன்னைக்காயல்	...	19—20
தென்காயல்	...	21—24
காயற்பட்டினம்	...	25—28
கீழக்கரையும் சீதக்காதியும்	...	29—33
சீதக்காதியும் சேதுபதியும்	...	34—36
சீதக்காதியும் கும்பெனியாரும்	...	37—41
வள்ளலாரும் ஸதக்கத்துல்லா வலியும்	...	42—48
வள்ளலும் புலவர்களும்	..	49—50
சீதக்காதியின் வள்ளன்மை	...	50—56
வள்ளலாரின் உறவினர்: கீழக்கரையில் ஞாபகச்சின்னங்கள்	...	57—58
முடிவுரை	...	59
Bibliography		60—61

படங்கள்

To Face Page

நூலாசிரியர் Frontispiece

மார்கொபோலோ மாபருக்கு வந்த காலத்து இருந்த காயல் ... 13

பண்டைக்காலத்திலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கும் தமிழ நாட்டிற்கும ஏறபட்டிருந்த தொடர்பு 14

கி. பி. ஏழாவது நூற்றாண்டு முதல் தமிழ நாட்டில முஸ்லிமகள் குடியேறியதைக காட்டுவது... 16

கீழக்கரையில் பழைய குத்பா பளளி ... 24

மின்ஹாஜ் பள்ளி ... 24

கடற்கரைப்பளளி ... 24

வாவாலி மரக்காயர் கல்லறை ... 30

சீதக்காதியின் கல்வீடு ... 30

சீதக்காதி கட்டிய குத்பா பளளி ... 30

மக்தூம் சின்னயினு லப்பையின கல்லறை ... 43

ஸதக்கத்துல்லா வலியின கல்லறை ... 48

சீதக்காதியின் கல்லறை ... 56

முகம்மது அப்துல்காதிறு மரக்காயரின் கல்லறை ... 58

சீதக்காதியின் அத்தாணி மண்டபம் ... 59

முன்னுரை

இற்றைக்குச் சற்றேறக்குறைய இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த சீதக்காதிவள்ளலின் வரலாறு இந்நூலில் திரட்டப்பட்டிருக்கிறது. சீதக்காதி ஓர் தமிழர்; இஸ்லாம் சமயத்தவர்; பதினேழாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஒப்பற்ற வள்ளலாக வாழ்ந்தவர். அவருக்கு ஹிந்து முஸ்லிம் என்ற வேறுபாடு இல்லை. அவர் அறிவும் அன்பும் உடையவராயிருந்தார்; எல்லாரிடத்தும் எப்பொழுதும் அருளுடையவராயிருந்தார்; தமிழ்ப்புலவர்களுக்குப் பெருநிதி போல் விளங்கினர்.

புலவர்திலகர்களால் போற்றப் பெற்ற இப்பெருமானைத் தமிழுலகம் மறந்திருந்தது. 1939-ஆம் ஆண்டில் செய்தக்காதி பேரில் நொண்டிநாடகம் என்ற நூல் சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் வெளிவந்தபின் வள்ளலாரின் பெயர் புத்துயிர் பெற்றதென்னலாம். அந்நூலால் பதினேழாம் நூற்றுண்டின் சரித்திரச்செய்திகள் சில வெளியாகின்றதோடு, சீதக்காதியின் கொடைச்சிறப்பும், புலவர்களும் பெரியோர்களும் பாராட்டும் வண்ணம் வாழ்ந்த வாழ்க்கைவரலாறும், பஞ்சகாலத்தில் பசியும் பிணியு மின்றி மக்கள் வாழ உதவிய செய்திகளும் புலனுகின்றன. ஆனல், அவர் எந்த ஊரில் எந்த ஆண்டில் அவதரித்தார் என்ற விவரத்தையும் எங்ஙனம் பொருளீட்டினர் என்ற வரலாறுகளையும் எடுத்துரைக்கும் நூல்கள் இதுகாறும் காணப்படவில்லை.

சீதக்காதி பிறந்த ஊர் காயல்பட்டினமா, கீழக்கரையா? என்ற பொருளைப்பற்றி திருச்சியில் 'ஷாஜஹான்' பத்திரிகையில் 1951-1952-ஆம் ஆண்டுகளில் சில கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன. வள்ளலார் அவதரித்த ஊர் யாதாயிருந்தாலும் தமிழ்நாட்டிற் பிறந்தவராகையினல் தமிழ்நாட்டுக்கே பெருமையை அளிப்பதாக இருக்கிறது.

அறபியர் தென்னிந்தியாவிற்கு—குறிப்பாகத் தமிழ் நாட்டிற்கு—வந்த விவரங்களையும், கடற்கரை யோரங்களிலுள்ள பட்டினங்களில் முஸ்லிம்கள் செல்வாக்குப் பெற்றிருந்த நிலைமையையும் இங்கு எழுதியுள்ளேன். கி. பி. ஏழாம் நூற்றுண்டிலிருந்து பதினேந்தாம் நூற்றுண்டுவரை முஸ்லிம்கள் அகில உலகிலும் புகழ் பெற்ற வணிகர்களாய்த் திகழ்ந்தார்கள் என்பது சரித்திரம் அறிந்த விஷயம். இஸ்லாம்மார்க்கத்தைத் தழுவிய தமிழ்மக்களும் வாணிகம் செய்து செல்வர்களாய்ச் சிறப்புற்று வாழ்ந்தார்கள்.

தொண்டிநாடகத்தைப் பதிப்பித்த காலத்திலிருந்து தொடங்கிய எனது ஆராய்ச்சியின் பயனுக யான் அறிந்த கருத்துக்களை இயன்றஅளவில் இந்நூலில் வெளியிட்டுள்ளேன். இவற்றில் பிழைகள் பல இருக்கலாம். கற்றேர் அக்குறைகளை எடுத்துக் காட்டி, தக்கபடி ஆதரவு அளிக்க வேண்டுகின்றேன்.

சென்னை }
15–4–53 }

S. முஹம்மது ஹுஸைன் நயினர்

சீதக்காதி வரலாறு

தோற்றுவாய்

சரித்திரகாலத்திற்கு முன்பிருந்தே தமிழ்நாட்டினருக்கும் அறபுநாட்டினருக்கும் வியாபாரத்தொடர்பு ஏற்பட்டிருந்தது என்பது யாவரும் அறிந்தசெய்தியாகும். சிலோன், கிழக்கிந்தியத் தீவுகள், சீனு முதலிய கீழ்த்திசைநாடுகளிலுள்ள பெயர்பெற்ற வாசனைத்திரவியங்களை மேல்நாட்டினருக்கு அளித்தவர்கள் அறபியவணிகர்களேயாவர். அவர்களுடைய மரக்கலங்கள் கீழ்கடல்களெங்கும் சுற்றித் திரிந்தன. தமிழ் நாட்டுத் துறைமுகங்கள் அக் கலங்களுக்குப் பண்டமாற்று இடங்களாயும், நெடுநாட்பிரயாணத்தினிடையே தங்குமிடங்களாயும் விளங்கின. தமிழ்நாட்டுத் திரவியங்களும் அறபிய வணிகர்மூலமாகவே மேல்நாடுகளுக்கும் கீழ்நாடுகளுக்கும் சென்றன. வியாபாரத்தின்மூலம் ஏற்பட்ட தொடர்பினுல் தமிழ் நாட்டுமக்களும் அறபியமக்களும் மிக நெருங்கிப் பழகலானுர்கள். ஆதலின், இவ் விருதிறமக்களுள்ளும் நெருங்கிய நட்பு ஏற்படலாயிற்று.

கி.பி. ஏழாம்நூற்ருண்டின் தொடக்கத்தில் அறபுநாட்டில் இஸ்லாம் தோன்றியது. முகம்மது நபிநாயகம்அவர்களின் போதனைகள் எங்கும் எளிதில் பரவின. சிறிதுகாலத்திற்குள் அறபியர்அனைவரும் முஸ்லிம்களாய்த் திகழ்ந்தனர். வியக்கத் தக்க இம்மாறுதல்காரணமாக அறபுமுஸ்லிம்கள் தங்களுக் குரிய கடல்கடந்த வாணிகத்தைக் கைவிடவில்லை. அவர்கள் முன்போலவே பண்டமாற்றுச் செய்தார்கள்; பொருள் ஈட்டினுர்கள். இவற்ருேடு அவர்கள் நின்றுவிடவில்லை. அவர்கள் தாங்கள் தழுவிய இஸ்லாம்மார்க்கத்தில் மிகுந்த பற்றும் ஆர்வமும் கொண்டிருந்தனராதலின், பிறநாட்டுமக்களிடையே நபி நாயகத்தின் மேலான, எளிய, போதனைகளைப் பரப்ப வேண்டும் என்ற அளவற்ற ஆசை அவர்களுக்குண்டாயிற்று.

அதனால், தங்கள் வாணிகப்பொருள்களோடு பிறநாடுகளுக்கு நபி நாயகம்அவர்களின் உபதேச ரத்தினங்களையும் ஒருங்கே கொண்டு சென்றார்கள்; செல்லுமிடங்களிலெல்லாம் இஸ்லாமியப்பிரசாரம் செய்யலானார்கள். இப் பிரசாரம் சந்தைகளிலும், தெருக்களிலும், தனிப்பட்ட மனிதர்களிடத்தும் உண்மையான தீவிரத்துடன் அன்பு காரணமாக நடை பெற்றது. அவர்கள் பலாத்காரச்செயல்களிலோ பிறமதநிந்தனையிலோ ஈடுபட்டதில்லை.

தமிழ்நாட்டினருக்கும் அறபுநாட்டினருக்கும் இயல்பாகவே இருந்த பழங்காலத்தொடர்பு இஸ்லாம் தோன்றியபின்னரும் நீடித்துவந்தது. தமிழ்நாட்டில் இஸ்லாம் சிறிது சிறிதாகக் காலூன்ற ஆரம்பித்தது. அச் சமயத்தில் சூபிகள் என்ற முஸ்லிம் தத்துவஞானிகள் தோன்றி இஸ்லாமியக் கொள்கைகளை எளிய முறையில் பரப்பலானார்கள்.

இத்தகைய பிரசாரத்தைத் தென்னிந்தியா—சிறப்பாகத் தமிழ்நாடு—ஏற்கத்தக்க நிலையில் இருந்தது. கி. பி. ஏழு, எட்டு, ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகள் தமிழ்நாட்டுவரலாற்றில் மிக முக்கியம் வாய்ந்தவை. அக்காலத்தில் நாடெங்கும் சமயக் கருத்துக்களில் ஒரு புத்துணர்ச்சி தோன்றியது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றிச் சமூகத்தில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்தார்கள். எங்கெங்கும் மதத்தைப்பற்றிய பேச்சே தலைதூக்கி நின்றது. அரசியல், சமூகம் இவற்றின் சம்பந்தப்பட்ட கருத்துக்கள் யாவும் மதத்தையே அடிப்படையாகக்கொண்டிருந்தன. மக்களிடத்தில் மதவுணர்ச்சி மிதமிஞ்சிப் பரவியதென்பது தவறாகாது. இந்நிலையில் இஸ்லாமியப் பிரசாரம் நமது நாட்டில் நடந்தது. நேரடியான—சுருக்கமான—எளிதில்விளங்கக்கூடிய—விவாதத்திற்கிடமில்லாத—இஸ்லாமியப் போதனைகள் தமிழ்நாட்டில் பலரால் வரவேற்கப்பட்டன. மேலும், முஸ்லிம் சூபிகளின் கருத்துக்களுக்கும் தமிழ் நாட்டு உண்மை ஞானிகளின் கருத்துக்களுக்கும் பெரிதும் வேறுபாடு காணப்படவில்லையாகலின், இஸ்லாமிய சமயம் தமிழ்நாட்டு மக்களிடையே யாதொரு சச்சரவும், பிணக்கும், ஆரவாரமுமின்றி அமைதியுடன் பரவிவந்தது.

கி. பி. பதினொன்றும் நூற்றாண்டுக்குப்பிறகு இந்தியாவில் இஸ்லாம் பரவிய முறையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. இஸ்லாமியப் பேரரசு மங்கோலியர், துருக்கியர் என்பவரின் ஆதிக்கத்துள் சிக்கியது. அவ் விருவருக்கத்தினரும் முதலில் இஸ்லாத்திற்கு விரோதமாயிருந்தனர். பின்னர் நாள் செல்லச் செல்ல, அம் மார்க்கத்தின் உண்மையை அறிந்து, அதைத் தழுவினால் தமக்கு ஈருலகச் சீரும், சிறப்பும், செல்வாக்கும் கிடைக்கு மென்பதை உணர்ந்தனர். அதனால், இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினர். முஸ்லிம்களாக மாறியும் ஆழ்ந்த மதப்பற்று அவர்களிடம் காணப்படவில்லை. நாடுகளை வென்று தங்கள் அரசைப் பெருக்குவதே முக்கியநோக்கமாகக் கொண்ட அவர்கள், மதவிஷயங்களில் கவனமும் உண்மையான ஊக்கமும் இல்லாதவர்களாய் இருந்தனர். வடமேற்குஎல்லைப்புறத்தி லிருந்து, இந்தியாவின் மீது அவர்கள் படையெடுத்து வந்து சிறுகச் சிறுக வடஇந்தியாவில் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டிய பிறகு, இஸ்லாத்திற்கு அரசியல்ஆதரவும், ஆக்கமும் உண்டாயின. பலர் முஸ்லிம்களாயினர். ஆனால், தென்னிந்தியாவில்—முக்கியமாகத் தமிழ்நாட்டில்—கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து சிறிது சிறிதாக இஸ்லாம் மார்க்கம் சமாதானத்தை அடிப் படையாகக் கொண்டு பரவிற்று. கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் தென்னிந்திய முஸ்லிம்களுக்கு அரசியல்ஆக்கமும் ஊக்கமும் ஏற்படலாயின.

துருக்கி வமிசத்தவரான டில்லிஅரசர் அலாவுத்தீன் கல்ஜியின் (கி. பி. 1296-1316) படைத்தலைவரான மாலிக் காபூர் தென்னிந்தியாமீது படையெடுத்த பின்புதான் (கி. பி. 1310) தமிழ்நாட்டுஇஸ்லாமிய வரலாற்றில் அரசியல்ஆதிக்கத்தின் விளைவுகள் சிறிது சிறிதாகத் தலையெடுக்க ஆரம்பித்தன. முகலாயப் பேரரசரான அவ்ரங்கு சேபு, (1658-1707) ஹைதர் அலி, (1761-1784) திப்புசுல்தான் ஷஹீது (1784-1799) என் பவர்களின் காலத்தில் இஸ்லாமியப் பிரசாரத்தில் அரசியல் ஆதரவு உச்சநிலையை அடைந்தது.

தமிழ்நாட்டில் இஸ்லாம் மார்க்கத்தின் உண்மையான போதனைகள் பிரசாரம் செய்யப்பட்டு வந்ததனால் அதன்

உயர்ந்த கொள்கைகளைக் கண்டு வியந்து செல்வாக்குள்ள இந்துக்களுள் பலர் இஸ்லாத்தைத் தழுவினர். பிறசமயங்களில் காணப்பட்ட சாதிப்பிரிவினை முதலிய கொடுமைகளுக்கு இஸ்லாத்தில் இடமே இல்லாமையால், இம் மதத்திற்குப் பேராதரவு கிடைத்ததில் ஆச்சரிய மில்லை. இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியவர்களுள் பலர் தம் சொந்தநாடாகிய தமிழ் நாட்டிலேயே சீரும், சிறப்பும், செல்வமும் பெற்று விளங்கினர். இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளில் அவர்கள் சமூக முக்கியத்துவத்தை அடைந்ததுமல்லாமல், அரசியல் முக்கியத்துவத்தையும் பெற்றார்கள். நாளடைவில் அரசினர்க்கு நண்பர் ஆனவர் பலர்; அமைச்சர் ஆனவர் சிலர்; திரைகடலோடித் திரவியந் தேடித் தமிழ்நாட்டில் குவித்த மரக்கல மன்னர் பலர்; சமயக்கல்வியாளர்களையும், ஒழுக்க மிக்க பெரியார்களையும் ஆதரித்துத் தமது புகழை நிலைநாட்டியவர் சிலர்.

மேற்சொன்ன சிறப்புக்கள் யாவும் ஒருங்கே அமையப் பெற்றவர் சீதக்காதி என்னும் வள்ளலே யாவார். சீதக்காதி என்னும் பெயர், ஷைகு அப்துல் காதிறு என்பதன் மரூஉ. இப் பெயர், 'செய்தக்காதிறு,' 'செய்தக்காதி,' 'சைத காதி' 'சீதக்காலி' 'சீதக்காதி' என்றும் வழங்குகின்றது.

சீதக்காதி, தமிழ்முஸ்லிம்களுள் தலைசிறந்து விளங்கினார். முஸ்லிம்களுக்கும் இதரர்களுக்கும் புரிந்த அரிய தொண்டு தமிழ் நாட்டில் என்றும் அழியாதவாறு பதிந்திருக்கிறது. அவர் இஸ்லாத்திற் கொண்ட பக்தியும், தமிழ்ப்புலவர்கள் மீது கொண்ட அன்பும், வரையாது கொடுத்த வள்ளன்மையும், மன்னர்களுடன் சரியாசனத் தமர்ந்திருந்த பெருமையும் பல நூல்களாலும் பாடல்களாலும் வெளியாகின்றன.

சீதக்காதியின் காலம்

சீதக்காதிவள்ளலார் பிறந்த வருடம், மாதம், தேதி இவற்றை வரையறுத்துக் கூற இயலாவிடினும், அவர்காலத்தைப் பல்வேறு சான்றுகளால் நன்கு உய்த்துணரலாம்.

கி. பி. 1674-ஆம் ஆண்டுமுதல் 1710-ஆம் ஆண்டுவரை இராமநாதபுரத்தில் அரசு புரிந்த கிழவன்சேதுபதி என்ற

விசய ரகுநாதத்தேவர் சீதக்காதியோடு அன்புடன் பழகி வந்தார் என்று தெரிகிறது. தொண்டிநாடகத்தில், சீதக்காதியை விசய ரகுநாதப் பெரியதம்பி என்று குறிப்பிடுவதனால், அப்பெயர் அரசனால் வழங்கப்பட்ட சிறப்புப் பெயர் என்பது புலனாகின்றது. பண்டைக்கால அரசர்கள் தம் நண்பர்கட்கும், அன்புடன் பழகுகிறவர்கட்கும் தம் பெயரை வழங்கியிருக்கிறார்கள்.

முகலாயப்பேரரசராகிய அவ்ரங்கு சேபு காலத்தில், செஞ்சிக்கோட்டையை முஸ்லிம்கள் முற்றுகை யிட்டபோது சுமார் எட்டு ஆண்டுகள்வரை (1689–1697) நடந்த போரின் விவரம் தொண்டிநாடகத்தில் காணப்படுகிறது. மக்கள் பல கஷ்டநஷ்டங்கள் அடைந்தமை அதில் கூறப்படுவதனால், அந்நிகழ்ச்சி மக்களிடையே பெரிய அச்சத்தை உண்டு பண்ணியதாகக் கொள்ளலாம். அந்நிகழ்ச்சியைப் புலவர்கள் கற்பனையுடன் இயைத்துக் கதையாகவும் நாடகமாகவும் எழுதி, அக்காலத்தில் பெயர்பெற்று விளங்கிய பெரியார்ஒருவரையும் இணைத்துச் சுவையை உண்டுபண்ணியிருக்கின்றனர். தொண்டி நாடகத்தில், செஞ்சிப்போர்வரலாற்றுடன் சீதக்காதியின் பெயரையும் இணைத்திருப்பதனால், வள்ளலார் அக்காலத்தில் புகழ்பெற்று வாழ்ந்திருந்தாரென்று எண்ண இடமிருக்கிறது.

சீதக்காதிவள்ளல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாருடன் கடிதப் போக்குவரத்து நடத்திவந்த விவரம் டைரி கன்ஸல்டேஷன் புத்தகங்கள்மூலம் வெளியாகிறது. கி. பி. 1686, 1687, 1690 ஆகிய இவ் வருடங்களில், வள்ளலார் கம்பெனிக்குப் பல கடிதங்கள் எழுதியிருக்கிறார். அதனால், அவர் அக்காலத்தில் வாழ்ந்தவர் என்று தெரிவதனோடு, இளம் வயதுள்ளவராய் இருத்தல் வேண்டுமென்பதும் புலனாகின்றது.

சீதக்காதிவள்ளல் வாழ்ந்த காலத்தில் இருந்தவர்களுள் மிகச் சிறந்தவர் ஸதக்கத்துல்லா வலி என்பவர். வள்ளலார் அப்புனிதப்பெரியாரின் நெருங்கிய நண்பராய் இருந்தார். வலி அவர்கள் ஹிஜ்றி 1115-ஆம் ஆண்டு ஸபர் மாதம் ஐந்தாம் தேதி (கி. பி. 1703) வபாத்தானார் (காலமானார்). அச்சமயம்,

முகம்மது திபி ஒரு சரமகவி பாடியிருக்கிறார். அதில், வலி அவர்களின் நெருங்கிய நண்பரும் பல துறையில் கீர்த்தியுடன் வாழ்ந்துகொண்டிருந்தவருமான சீதக்காதி வள்ளலார் அடைந்த பிரிவுத்துன்பத்திற்கு ஆறுதல் கூறப்பட்டிருக்கிறது.

ஸதக்கத்துல்லா வலிஅவர்களின் ஆசிரியரான மக்தூம் சின்னயினு லப்பைஅவர்கள், ஹிஜ்றி 1070-ம் ஆண்டில் (கி.பி. 1659) வபாத்தான பின், வலிஅவர்கள் குருவின் ஆசனத்தில் அமர்ந்து, மாணவர்கட்குக் கல்வி போதித்துவந்திருக்கிறார். ஸதக்கத்துல்லா அவர்கள், ஹிஜ்றி 1115-ஆம் ஆண்டில் வபாத்தானபோது அவருக்கு வயது எழுபத்து மூன்று என்று கூறப்படுவதனால், அவர்கள் மத்றஸாவில் குரு மக்தூம் சின்னயினு லப்பைஅவர்களுக்குப் பின் ஆசிரியராக வந்த காலத்தில், சுமார் முப்பது வயதினராய் இருந்திருக்கவேண்டும். வள்ளலாரும் வலி அவர்களும் பிரியாத் தோழர்களாய்ப் பழகி வந்ததனாலும், வள்ளலார் வலிஅவர்களைப் போற்றிக் கண்ணியமாக—சீடரைப்போல்—நடந்துவந்ததனாலும் இவ் விருவர்களுக்கிடையில் வயதுவேறுபாடு அதிகம் இருந்திருக்காது. வள்ளலார் இளையவராய் இருந்திருக்கவேண்டும். வலிஅவர்களைவிட வள்ளலார் எத்தனை வயது குறைந்தவரென்று கூறப் போதிய ஆதாரம் கிடைக்கவில்லை யெனினும், 1710—ஆம் ஆண்டிற்குமேல் 1720-ஆம் ஆண்டிற்குள் வள்ளலார் வபாத்தாயிருக்கவேண்டு மென்ற விவரம் கீழ்க்காணுமவற்றால் புலனாகும்.

கி. பி. 1709—ஆம் ஆண்டில், இந்திய சரித்திரத்திலேயே நிகழாத ஒரு பெரிய புயல் இராமநாதபுரத்தை யொட்டிய கடற்கரையில் எழுந்தது; அவ்வாண்டின் இறுதிமாதம் 18-ஆந் தேதி வைகறையில் மூண்டெழுந்து, பகல் 12 மணிவரை விடாமல் வெகுவேகத்துடன் வீசியது; நான்குமணி நேரம் ஓய்ந்து, முன்பு வீசியதைவிடப் பன்மடங்கதிகமாக இரவுமுழுதும் அடித்தது. அதனோடு பெருமழையும் பெய்ததனால் வெள்ளம் பெருகிவர, முன்னரே நிறைந்திருந்த குளங்களெல்லாம் வெள்ளப்பெருக்கால் உடைப்பு எடுத்தன. எங்கும் ஒரே வெள்ளக் காடாயிற்று. நாடு முழுதும் ஆடு, மாடு, நாய் முதலிய பிராணிகளும், ஆண், பெண், குழந்தை முதலியோரும்

உயிரிழந்து மிதந்துகொண்டிருந்ததனால், பிணக்கடலாய்க் காட்சியளித்தது. இராமநாதபுரமே பிரளயஉலகமாக மாறியது. ஆழ்ந்து வேரூன்றியிருந்த பல மரங்கள் தலைசாய்ந்தன. பல்வேறு நிலையில் இருந்த பயிர்நிலங்கள் எப்பொழுதும் செப்பனிட முடியாதவாறு மணலால் மூடப்பட்டன. வெள்ளம் வடிந்தபின், குளம், கிணறுகளில் நிறைந்திருந்த பிணங்களின் நாற்றம் வெகுதூரம் வீசியது. அதனால், பல வியாதிகளும் தோன்றின. அங்ஙனம் நேர்ந்த இன்னல்களால், நான்கு வருடகாலம்வரை கொடுமையான பஞ்சம் ஏற்பட்டது. அதனால், பலர் மடிந்தனர்; சிலர் வேறுஊர்களுக்குச் சென்றனர்; சிலர் மதுரைக்கும் தஞ்சைக்கும் சென்றனர். இப் புயல் நிகழ்ந்த அடுத்த ஆண்டில், கிழவன் சேதுபதி உயிர்துறந்தார். இராமநாதபுரத்து மக்கள் பஞ்சத்தின் கொடுமையால் வாட்டமடைந்தனர். புயலடித்த ஆண்டுக்குமுன்பு, ஒரு மரக்கால் (எட்டுப்படி) அரிசியை ஒருபணத்திற்கு (இரண்டரை அணவிற்கு) வாங்கிவந்த மக்கள், 1713-ஆம் ஆண்டில், அதே அளவுள்ள அரிசியை முப்பத்திரண்டு பணத்திற்கு வாங்கலானார்கள். ஒன்றுக்கு முப்பத்திரண்டு பங்கு விலையாயிருந்ததனால் பஞ்சம் எவ்வளவு கொடுமையா யிருந்தது என்பது அறியலாகும். அத்தகைய பஞ்சகாலத்தில் சீதக்காதிவள்ளல் ஏராளமாகப் பொன்னைச் செலவுசெய்து பலஇடங்களிலிருந்து உணவுப்பொருள்களைக் கொண்டுவந்து மக்களுக்கு வழங்கினார்; ஏழைகள் எவ்விதத் தடையுமின்றி உண்ண உணவுஅளித்தார். அதனாலன்றோ 'ஓர்தட்டிலே பொன்னும் ஓர்தட்டிலே நெல்லும்' என்ற பாடல் தோன்றியது! அது கற்பனை அன்று; உண்மையுரை. அக்காலத்தில் மக்கள் பட்ட துயரத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக்காட்டும் அழகிய சித்திரம் என்றே அப் பாடலைக் கொள்ளவேண்டும்.

மேற்கூறியவற்றால், சீதக்காதிவள்ளல் 1650-ஆம் ஆண்டிற்குச் சில காலம் முன்னரோ பின்னரோ பிறந்திருப்பாரென்றும், 1720-ஆம் ஆண்டினையடுத்து இறந்திருப்பாரென்றும் கொள்ளலாம்.

1902-ல் வெளியிடப்பெற்ற 'அபிதான கோசம்' என்னும் நூலில், பூங்கோதை என்னும் பெயருடைய ஒருதாசி

இருநூற்றெழுபது ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தனள் என்றும், அவள் சீதக்காதியின் காமக்கிழத்தி யென்றும், அவளுக்கு ஒருசமயம் வள்ளலார் பலபரிசுகளைக் கொடுத்தாரென்றும், அவற்றை அவள் கொண்டுபோகுங்கால் கள்வரிடம் பறி கொடுத்தாள் என்றும், மீண்டும் சீதக்காதியிடம் வந்து, 'தினங்கொடுக்குங் கொடையானே' என்று தொடங்கும் செய்யுளைப் பாடினள் என்றும் எழுதப்பட்டிருக்கின்றன. இச்செய்தி உண்மையாதல் இன்று. என்னெனின், 1902-ஆம் ஆண்டில் எழுதியவர் இருநூற்றெழுபது ஆண்டுகளுக்கு முன் நடந்ததாகக் கூறியதனால், வள்ளலார் 1632-ம் ஆண்டில் வாழ்ந்திருந்தார் என்பது போதரும். ஆனால், முன்பு கூறிய காரணங்களை நோக்கும்போது, அக்காலத்தில் அவர் பிறந்து கூட இருக்கமாட்டார் என்று துணியலாம். மேலும், சீதக்காதி வள்ளல் காமக்கிழத்தியை யுடையவராய் இருந்தாரென்பது பொய்யுரையுமாகும். ஸதக்கத்துல்லா வலிஅவர்களின் நெருங்கிய நண்பராகிய வள்ளலார் அத்தகைய செயலை மேற்கொண்டிருந்தாரென்பது சிறிதும் ஒவ்வாது. பூங்கோதை பாடியதாகக் கூறப்படும் பாட்டில், கள்ளர் கையில் பறி கொடுத்த பொருள் சீதக்காதி கொடுத்த உடைமையன்று; வியபிசாரத்தால் ஈட்டப்பட்டது என்று விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

பூங்கோதை பொருளைப் பறி கொடுத்தபின், வள்ளலாரை வணங்கி வேண்ட, வள்ளலார் எவ்வளவு பொருள் வேண்டுமென்று வினவியதற்கு, "ஐயா, ஆயிரம் பொன்" என்று பதில் சொன்னதும், ஐயாயிரம் என்று அவர் காதினிற் பட்டதனால், ஐயாயிரம் பொன் அளித்ததாக ஒரு கதை வழங்குகிறது. இவ்வாறிருக்க, அபிதான கோசம் ஆசிரியர் ஆதாரமில்லாத பொய்க்கதையை எவ்வாறோ எழுதிவிட்டார். ஒருகால், பண்டைத் தமிழ்இலக்கண நூல்களில் 'பரத்தையிற் பிரிவு' என்பது ஒன்று காணப்படுவதனால், அதைத் தமிழர் பண்பாடு என்று தவருகப் புலவர்கள் மயங்கி, தமிழ்இலக்கியங்களிலும் தனிப்பாடல்களிலும் ஏற்றிக் கூறியதற்கேற்ப, நமது வள்ளல்மீதும் இப் பழிச்சுமையை ஏற்றிவிட்டார் என்று தோன்றுகிறது. அவ்வாசிரியர் தமிழ்முஸ்லிமாகிய வள்ளலார்

தமிழர்பழக்கவழக்கங்களை மேற்கொண்டிருக்கலாமென்று தவருகத் துணிந்து எழுதியிருக்கலாம். இஸ்லாம் மார்க்க உண்மைகளையும், பெரியார்களின் மாண்புகளையும், மரியாதைகளையும் உணராது எழுதியிருக்கலாம் என்பதில் ஐயமில்லை.

சீதக்காதி பிறந்த ஊர்

சீதக்காதியின் முன்னோர்கள் செல்வர்குலத்தைச் சேர்ந்த மரக்கலராயர்மரபில், ஊரின் தலைமைக்காரர்களாய்ப் பிரபுக்கள் தெருவில் வசித்துவந்தார்கள். மவ்லா சாஹிபு என்ற பெரிய தம்பிமரக்காயருக்கும், அவர் அருமைமனைவியார் ஸைய்யிது அஹ்மது நாய்ச்சியாருக்கும் மூன்று செல்வப்புதல்வர்கள் பிறந்தனர். அவர்களுள், நம் சீதக்காதிவள்ளல் நடுநாயகமான இரண்டாம் புதல்வராவார்.

சீதக்காதிவள்ளல் பிறந்து வளர்ந்து புகழ் பூண்டது கீழக்கரை என்று பெரும்பாலோர் கூறுவர். ஒருசாரார் திருநெல்வேலிச் சீமையில் உள்ள காயல்பட்டினம் என்று கூறுவர். அதற்குப் பொருத்தமாக, நொண்டிநாடகத்தில், 'காயற்றுறை செய்தக்காதி', 'காயல்நகரன்' 'காயல் மன்னவன் செய்தக்காதி', என்று காயல் பதத்தோடு இணைக்கப்பட்டுள்ள சொற்றொடரையும், தனிப்பாடலில், 'தென் காயல் பதியானே' என்று கூறப்பட்டிருப்பதையும் ஆதாரம் காட்டுவர்.

இதன் உண்மையை நடுநிலைநின்று ஆராய்வாம். காயல் என்ற சொல் கடலோரத்தில் உள்ள சதுப்புநிலம், கழிநிலம் முதலிய பொருளைத் தருவதொரு சொல். மன்னார்வளைகுடாக் கரைக்கு அருகே சதுப்புநிலங்கள் பல காணப்படுகின்றன. அந் நிலங்களில் உள்ள ஊர்களைக் காயல் என்ற பெயருடன் சேர்த்துக் கூறுவது இயற்கை. அவ்வாறே, காயல், பழைய காயல், புன்னைக் காயல், தென்காயல், காயற்பட்டினம் என்னும் பெயர்கள் தோன்றியிருக்கின்றன. இவற்றின் வரலாறுகளைச் சுருக்கமாகக் கூறுவோம்.

காயல்

தாமிரவருணிநதியின் முகத்துவாரத்தில், கடலுக்கு மேற்கே சுமார் இரண்டு மைல் தூரத்திற்கப்பால், காயல் என்ற ஒரு புராதன பட்டினம் இருந்தது. அதன் அக்ஷாம்சம் 8° 40'

78 °09'. அது பண்டைநாளில் 'இந்தியாவின் திறவு கோல்' என்று புகழ்பெற்ற மாபரில் (معبر) ஒரு பெரிய துறைமுகமாய் விளங்கியது. மாபர் என்னும் அறபிச்சொல்லுக்குக் 'கடந்து போகிற இடம்' என்று பொருள். சோழமண்டலத்திலிருந்து இலங்கைத் தீவுக்கு எளிதாகச் செல்ல வசதியாகவும் சமீபமாகவும் உள்ள கடற்கரையின் பாகத்தை மாபர்பிரதேசமென்று அறபியர் வழங்கிவந்தனர். நாளடைவில், கொல்லத்திலிருந்து நெல்லூர்ப்பிரதேசம் வரையுள்ள கடற்கரையையும் மாபர் என்று பிரயாணிகள் வழங்கத் தொடங்கினர். ஆகையால், பெரிய மாபர், சின்ன மாபர் என்ற பாகுபாட்டை அறபியர் செய்திருக்கின்றனர். இந்தியக்கரையிலிருந்து இலங்கையில் உள்ள குருணாகலை முதலிய நகரங்களுக்குப் போகச் சௌகரியமாயுள்ள கரையைச் சின்ன மாபர் என்று குறிப்பிட்டிருக்கின்றனர்.

காயல் என்ற துறைமுகப்பட்டினத்துக்கு, ஹொர்மூஜ், ஏடன் முதலிய இடங்களிலிருந்தும் பாரசீகவளைகுடாவிலுள்ள கைஸ் என்ற தீவிலிருந்தும் எல்லாவிதப் பண்டங்களும் குதிரைகளும் கொண்டுவரப்பட்டன. பலதேசங்களிலிருந்து வியாபாரிகள் திரள்திரளாக வந்து கொண்டிருந்தார்கள். அதனால், காயல்துறைமுகத்தில் வியாபாரம் சுறுசுறுப்பாகவும் விரைவாகவும் நடந்துவந்தது. ராஷிதுத்தீன், வஸ்ஸாப், அப்துல் றஜ்ஜாக் முதலிய சரித்திர ஆசிரியர்களும் காயலின் வாணிகச் சிறப்பினைப்பற்றி மிகப் பாராட்டி எழுதியிருக்கிறார்கள்.

சீன், மாசீன் (வடசீனம், தென்சீனம்) ஆகிய தேசங்களிலிருந்தும், ஹிந்து, சிந்துப் பிரதேசங்களிலிருந்தும் மலை போன்ற சீனக்கப்பல்களில் நிறையப் பண்டங்கள் எப்பொழுதும் வந்துகொண்டே இருந்தன. பாரசீகவளைகுடாவின் தீவுகள் எல்லாவற்றிலும் உள்ள பொருள்களும், இராக், குராசான், ரூம், ஐரோப்பா முதலிய தேசங்களில் கிடைக்கக் கூடிய சிறப்பான சிங்காரமான—மினுக்கான—பண்டங்களும் மாபரில், காயல் துறையில் வந்து குவிந்துகொண்டேயிருந்தன என்று சரித்திர ஆசிரியர் வஸ்ஸாப் கூறுகின்றார்.



மார்கோபோலோ மாபருக்கு வந்த காலத்து இருந்த காயல்: கி. பி. 1293
காணக
கோரம்பள்ளம்குளம்
தூத்துக்குடி
பழயகாயல்
ஏரல்
கொற்கை
காயல்
புன்னைக்காயல்
தாமிரபருணி நதி
ஆறுமுகனேரி
காயல்பட்டினம்
திருச்செந்தூர்
உடன்குடி
குலசேகரபட்டினம்
8°45′
8°30′
78°15′
SCALE
1 INCH = 4 MILES

காயல்துறை பண்டைக் காலத்தில் தாமிரவருணிநதியின் முகத்துவாரத்தில கடலுககு அருகே இருந்தது, இக்காலத்தில், கடலிலிருந்து சுமார் ஒனறரைமைல தூரத்திறகபபால காணப படுகிறது. பழைய துறைமுகத்தை மணல் மூடியதனுல், கடலுககும இபபொழுதுளள காயலுக்கும இடையே ஒரேமணல் பரபபைக் காணகிறோம். மாாகொபோலோ கண்ட காயல் பழைய செலவாககை யிழந்து, ஒரு கிராமமாக மாறியிருக்கிறது. அஙகு முஸ்லிமகளுள சிறுதொகையினரும ரோமன கத்தோலிக்கக் கிறிஸதவாகளும வசிககின்றுர்கள். அதையடுத்துளள கிராமத்தில், பிராமணர்களும வேளாளாகளும வாழ்கின்றனர். இபபொழுது அங்குபபோயப பார்பபவர் இந்தக் காயல்கிராமந் தானு முனபு சீரும சிறபபும் பேரும பெருமையும புகழும பூணட, காயல்துறையாய இருந்ததென்று ஆசசரியபபடுவர்! ஆனுல் அதன புராதனப் பெருமையை எடுத்துக்காட்ட, சின்னங்கள் பல அஙகுக் காணபபடுகினறன. காயலிறகு வடக்கே கடற் கரையோரமாக இரண்டு மூனறு மைல தூரத்திலும ஒனறரை மைல் உளபாகத்திலும, இடிந்துகிடககிற கொததளஙகள, கோயில்கள, பணடசாலைகள, தூர்ந்து போன கிணறுகள், குளங்கள முதலியவை காணபபடுகினறன. மணல்வெளியில உடைந்த ஓடுகளும், சீனதேசத்திற செயயபபட்ட பீங்கானின துண்டுகளும, பிறநாட்டு நாணயங்களும கிடைக்கினறன.

அதுபோலவே, பண்டைக்காலத்தில் காயல்துறைக்கு அருகில் இருந்த கொறகைபபட்டினமும இபபோது கைவிடப பட்டது. கொற்கை பெயர்போன துறைமுகமாயிருந்த விவரத்தைக் கிரேக்கவணிகர்கள்மூலமாகவும, டாலமி எழுதிய வரலாற்றினமூலமாகவும அறிகிறோம. இது பாணடியர்களின தலைநகரமாயும இருந்தது. நாளடைவில், கடல் விலகியதனுல் கைவிடபபடவே, அதற கருகில காயல்துறை ஏறபடட தென பதை நாம உளஙகொள்ள வேண்டும.

இன்றைககு நூறுஆண்டுகளுக்குமுனவரை சரித்திர ஆசிரியர்களும ஆராயச்சியாளர்களும காயல்துறையை இப்பொழுதுள்ள காயறபட்டினம எனறே கருதிவநதனா. மார்கொ-போலோவின பிரயாணவர்ததமானஙகளை ஆராய்ந்து எழுதிய

ஆசிரியர் கர்னல் யூல் என்பவரும் இதே முடிவுக்கு வந்தார். ஆனால், டாக்டர் கால்டுவெல் என்பவர் கி. பி. 1861-ஆம ஆண்டில், நனகு ஆராய்ந்து, காயல் என்பது கொற்கைக்குப் பின அதனருகில் புகழபெற்ற துறைமுகம என்றும், இப்பொழுது பழையகாயல் என்று வழஙகபபடுகிற கிராமந்தான காயல் விளஙகிய இடமாகும என்றும தீர்மானித்தார். இதைக் கர்னல் யூல் என்பவரும 1871-ஆம ஆண்டில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

காயலில் முஸ்லிம்கள்

அறபுநாட்டுக்கும தென்னிந்தியாவுக்கும் தொன்றுதொட்டு வியாபாரப் போக்கு வரவு இருந்ததென்று முன்பே குறிப்பிட்டோம. இஸ்லாம தோன்றிய பின்னரும, அறபியர்கள பண்டைக்கால வியாபாரத்தொடர்புகளைக் கைவிடவில்லை. வியாபாரத்துடன் தம மதக கொள்கைகளையும் பரபப ஆவ லுடன் சென்றார்கள. இஸ்லாமவாயிலாகத் தமக்குண்டான புத்துணர்ச்சியைப் பிறருக்கும் சாத்விக முறையில் புகுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன அறபியருள் சிலர் தென் னாட்டில் உள்ள முக்கியத்துறைமுகங்களில் வசிக்க ஆரம பித்தனர். இந்நாட்டுப பெண்களை மணந்து இல்லறம நடத்தி வந்ததனால், முஸ்லிமமக்கள் பெருகினர். தென்கரையில் உள்ள துறைமுகங்களுள காயல ஒரு முக்கிய இடமாக இருந்ததனால், அங்கு முஸ்லிமகள அதிகமாகச் சென்று வாழ்ந்தனர். இங்ஙனம, இஸலாம் தோன்றிய காலத்திலிருந்து தென்னாட்டிற்குச் சிறுகச்சிறுக வந்து குடியேறிய முஸ்லிமகளின் தொகை கி. பி. எட்டாம் நூற்றாண்டின தொடக்கத்திலிருந்து திடீரெனப் பெருகத் தொடங்கியது. அந்நூற்றாண்டின் தொடக்கத்தில், உமய்யா வமிசத்துக் கலீபாக்களுள் அப்துல் மலிக் இபனு மற்வான் (685—705), அனனாரின் நான்கு புதல் வர்கள, இவர்களகாலத்தில, இஸலாமிய ஆட்சி உலக மெங்கும பரவியது. அபதுல் மலிக் இபனு மறவான்பிள்ளைக ளாகிய அல்-வலீது, ஸுலைமான, எசீது, ஹிஷாம் இவாகள காலத்தில் இஸ்லாமியஅரசு அட்லாண்டிக் மகாசமுத்திரக் கரை, ஸ்பெயின் இந்த எல்லைகளிலிருந்து சிநதுநதிப பிரதேசம, சீனதேசமவரைக்கும பரவியபோது, தென்னாட்டிலும முஸ்லிம


பாரசிகம்
அரபு தேசம்
கராச்சி
மதராஸ்
SCALE
1 INCH = 480 MILES

கள் கடற்கரையோரங்களில் உள்ள பல துறைமுகப் பட்டினங் களில் வந்து குடியேறினார்கள். அங்ஙனம குடியேறிய முஸலிம்கள் இஸ்லாமிய அரசாஙகத்தின ஆதரவினால் இந்தி யாவில் இடமபெற்று, அதன மூலமாக முஸ்லிமகளின செல் வாககைப பெருககவேண்டுமெனற நோககத்துடன வரவில்லை. இங்கு, இஸ்லாமிய வரலாற்றின் ஒரு பகுதியை அறிந்து கொள்வது அவசியமாகும.

அபதுல் மலிக் (685-705), அல்-வலீது (705-715) ஹிஷாம் (724-743) ஆகிய கலீபாக்களகாலத்தில், இஸலாமிய அரசு விரிவாகிப் புகழுடன விளங்கியதற்குக் காரணமாயிருந்தவர் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுபு, மூஸா இப்னு நுஸைர் எனனும் இரண்டு வைஸ்ராய்களாவர். ஹஜ்ஜாஜ் கிழக்குபபிரதேசத் திலும் மூஸா மேற்குப் பிரதேசத்திலும அருமபாடுபட்டு இஸ் லாமிய ஆட்சியை ஓங்கி வளரும்படி செய்தனர். பளளிஆசிரிய ராக வாழக்கையைத் தொடங்கிய ஹஜ்ஜாஜ் தம்திறமை காரண மாகப் பல இடங்கட்குக் கவர்னராக நியமிக்கப்பட்டார். அக் காலத்தில், இராக், பார்ஸ் ஆகிய மாகாணங்களிலிருந்த மக்கள் சச்சரவு செய்துகொண்டு அரசாங்கத்திற்குப் பல இன்னல்கள் விளைவித்துவந்ததனால் அமைதி குன்றியது. அங்குத் தகுதி யுள்ள வைஸ்ராய் ஒருவரை நியமிக்க வேண்டுமெனறு கருதிய கலீபா அப்துல் மலிக் எனபவர் ஹஜ்ஜாஜின் திறமை, சாமார்த்தியம், புலமை ஆகியவற்றை அறிந்து, அவ்விடத் திறகு அவரை வைஸ்ராயாக நியமித்தார். ஹஜ்ஜாஜ் சில நாட்களில், தன ஆட்சியின் கீழிருநத மாகாணத்தில் வாழந்த வண்டர்களைப பலவகையில் அடக்கி அமைதியை ஏற் படுத்தினார். அவர் கொடுங்கோல்வைஸராயாக இருந்தா ரென்று பிற்காலசரித்திரஆசிரியர்கள் கூறுவர். அக்காலத் தில் சமாதானமாக வாழ விரும்பி வெளியேறியவர்களுள் ஒரு பகுதியினர் தெனனிந்தியாவிலுளள மேற்குக்கடற்கரையிலும், கிழக்குக்கடற்கரையிலும குடியேறினார்கள. அதனால், மாபரில் முக்கியத் துறைமுகமாயிருந்த காயலிலும் முஸலிம்களின் எணணிக்கை பெருகியது.

ஹஜ்ஜாஜகாலத்தில்தான், அனனாரின தாயாதி சகோதர ரின் மகன் முகம்மது இபனு அல்-காஸிம் அல்-தகபி எனபவர்

கி. பி. 710-ம் ஆண்டில் மக்ரானையும் பலுசிஸ்தானையும் கைப்பற்றி, 711-712-ல் சிந்துப்பிரதேசத்தையும் இஸ்லாமிய ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார்.

கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மற்றொரு புரட்சியின் காரணமாக, முஸ்லிம்மக்கள் இடம் பெயர்ந்து வெளி நாட்டிற்குச் சென்றார்கள். அந்நூற்றாண்டில் ஏற்பட்ட புரட்சிக்கு இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய இரண்டு மதங்களுக்கும் இடையேயிருந்த விரோதமும் எதிர்ப்பும் காரணங்களாயிருந்தன. ஏழாம் நூற்றாண்டில் இஸ்லாம் தலையெடுத்த காலம்முதல், மேல்நாட்டில் உள்ள கிறிஸ்தவருக்கும் கீழ்நாட்டில் உள்ள முஸ்லிம்களுக்கும் எப்பொழுதும் போராட்டமாகவே யிருந்தது. இவ் விருதிறத்தாருக்கு மிடையே இருந்த மதவிவாதங்கள், பழக்கவழக்கவேற்றுமை, மொழிப்போர் முதலியன முதிர்ந்துகொண்டேவந்தன. இறுதியில், இந்த எதிர்ப்பு சிலுவைப்படைஎழுச்சி என்ற உருவத்தில் நாடெங்கும் குழப்பமேற்படுத்தியதனால் சமாதானம் குலைந்தது. அதனால், மத்தியகிழக்குப்பிரதேசங்களிலிருந்து முக்கியமாக, ஸீரியா, எகிப்து தேசங்களிலிருந்து சமாதானமே குறிக்கோளாகக்கொண்ட முஸ்லிம்கள் பலர் இந்தியாவில் குடியேறினார்கள். அவர்களுள் ஒருகூட்டத்தார் தென்னிந்தியாவுக்கு வந்து, தம் சாதியார் வாழ்ந்துவந்த பல துறைமுகப்பட்டினங்களில் குடியேறினார்கள்; இந்நாட்டுப் பெண்களை மணந்து இல்லறமும் நடத்திவந்தார்கள்.

இங்ஙனம், கி. பி. ஏழாம் நூற்றாண்டுமுதல் பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை முஸ்லிம்மக்கள் பலர் காயல்துறைமுகப் பட்டினத்தில் வாழ்ந்துவந்தார்கள் என்னலாம். காயல்துறையில் ஆரம்பத்திலிருந்து குடியேறிய முஸ்லிம்மக்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒரு கூட்டத்தார் வணிகர்கள்; மற்றொரு கூட்டத்தார் தெய்வபக்தியும் நல்லொழுக்கமும் நிறைந்தவர்கள். தொன்றுதொட்டு அறபுநாட்டுவணிகர்கள் வந்து போனதும், பிறகு இந்நாட்டிலேயே தங்கியிருந்ததும் இயற்கை. அல்லாஹ்-வின்மீது பக்தியோடு நபிநாயகம்அவர்களின் இரத்தின மொழிகளையும் எளிய வாழ்க்கையையும் நன்கு கற்றும்,


SCALE
1 INCH = 64 MILES
நெல்லூர்
கடலூர்
பறங்கிப்பேட்டை
நாகூர்
நாகபட்டினம்
முத்துப்பேட்டை
மதுரை
தொண்டி
வேதாளை
கீழக்கரை
கன்னியாகுமரி
மன்னார்
குருணாகலை
கண்டி
ஆதம் மலை
1 காயல்
2. காயல்பட்டினம்
3. வீரபாண்டியன்பட்டினம்
4. புதுமடம்
5. பெரியபட்டினம்
14°
12°
10°
8°
76°
78°
80°

கேட்டும் தெரிந்த பெரியோர்கள் தம் தேயத்தில் குழப்ப மேற்பட்டு அமைதி குறைந்தபோது, அங்கு வாழ விரும்பவில்லை. அவர்கள் எவ்வித இடையூறுமில்லாமல் எங்கு அமைதியுடன் வாழ முடியுமோ, அங்குச் செல்லக் கருதினார்கள். முஸ்லிம் வணிகர்மூலம் இந்தியாவின் நிலைமையைக் கேட்டு அறிந்தவர்களாதலால் இந்நாட்டுக்கு வந்து பல துறைமுகப்பட்டினங்களில் குடியேறினர்.

காயல்துறைமுகம் தன் செல்வாக்கையிழந்த பிறகு அங்கு வாழ்ந்துவந்த வணிகர், பெரியோர் ஆகிய இருவகை முஸ்லிம்களும் தென்கரையில் உள்ள மற்றைய ஊர்களுக்குச் சென்று குடியேறினர். அவற்றுள், தென்காயல் என்ற கீழக்கரை, பறங்கிப் பேட்டை, முத்துப் பேட்டை முதலியன சிறந்த ஊர்களாகும். அவர்கள் புதிய நகர்களை ஏற்படுத்தினர். அவற்றுள் சிறந்த நகரங்கள் புன்னைக்காயல், காயல்பட்டினம் முதலியனவாகும். அப்பட்டினங்களிலெல்லாம் வணிகரல்லாத முஸ்லிம்கள் பெருங்கல்வியாளர்களாகவும் நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் ஞானிகளாகவும் பிறருக்கு நன்னெறியைக் கற்பிக்கிறவர்களாகவும் வாழ்ந்திருந்தனர் என்பதைத் தமிழ் நாட்டு முஸ்லிம்கள் எல்லாரும் நன்கு அறிவார்கள்.

காயல்துறையில் முஸ்லிம்களின் மாண்பு

பண்டைக்காலத்தில், வெடிமருந்து இல்லாதபோது, ஒரு வேந்தன் வேற்றரசனைப் போரில் வெல்வதற்கும், வென்றபின், வெற்றி வேந்தனாய்ப் புகழுடன் என்றும் வாழ்வதற்கும் குதிரைப்படையே மிகவும் உபயோகமாய் இருந்தது.

பாண்டியநாட்டில் குதிரைகள் இல்லாமையால், அவற்றை அறபு நாட்டிலிருந்து கொண்டுவரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அங்ஙனம், குதிரைப் படையைச் சேகரிப்பதற்கும் அவற்றைக் கவனித்துப் பாதுகாப்பதற்கும் பாண்டிய நாட்டுப் பொருள் அதிகம் செலவாயிற்று. அக்காலத்தில், குதிரை வாணிகம் முற்றிலும் அறபியர்வசமேயிருந்ததனால், அந்த வியாபாரம்மூலம் அறபியர்கள் பெரும்பொருள் ஈட்டி வந்தார்கள்,

அவர்களுடைய செல்வாககும் பாணடிய நாட்டில் பெருகி வந்தது. கைஸ், ஹொராமூஜ, தபார், ஷ-ஃஹா, ஏடன ஆகிய பகுதிகளில உள்ள வணிகர்கள் பெருவாரியான குதிரைகளைச் சேகரிதது, பாண்டிய நாடடிற்கு ஏற்றுமதி செயதார்கள. மார்கொபோலோ மாபா பிரதேசத்துக்கு வநதபோது, மதுரை வேந்தன குதிரை ஒனறுககு இரணடாயிரம ரூபாய கொடுத்து வாஙகியதாகக் கூறுகிறா. ஒவவோராணடிலும அவவேந்தன இரண்டாயிரம குதிரைகளுக்கு மேல வாங்குவது வழக்க மென றும், அது போலவே பாணடிய நாட்டில் மறறைப் பாகஙகளில அரசு புரிந்த சுந்தர பாண்டியனின நானகு சகோதரர்களும குதிரைகளை வாஙகி வந்தார்களென றும கூறுகிறா. மேற கூறிய ஐந்து வேந்தாகளும வருடமொனறுக்குப பதினாயிரம குதிரைகளுக்கு மேல் வாங்கினராயினும வருடமுடிவில் ஒவ வொருவரிடமும நூறு குதிரைகள தாம் உயிருடன இருக்கு மாம; மற்றவை இறந்துவிடுவது வழக்கம. ஏனெனில், பாண் டிய நாட்டில் குதிரைகளைப பாங்குடன வளர்ககத் தெரிந்த வர்கள் ஒருவரும் இல்லை, குதிரைவைத்தியம் தெரிந்தவரும், லாடம அடிக்கத் தெரிந்தவரும இலலை. அறபியர்கள குதிரை வாணிகம் மூலம தமக்கு வருடாநதோறும கிடைககக் கூடிய பெரும் வருவாய் குறைந்துவிடுமெனறே லாடம அடிக்கத் தெரிந்தவர்களைத் தமமுடன் இந்நாட்டிற்கு அழைத்து வருவ தில்லை யென்றும், வர விருமபுமவர்களையும வாராமல் தடுத்துக கொண்டிருந்தார்களென்றும மார்கொபோலோ கூறுகிறா. அறபுநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட குதிரைகளெல்லாம காயல் துறையிலேயே இறக்கபபட்டன.

ராஷிதுத்தீன, வஸ்ஸாப் முதலியவர்கள் காயல்துறையின் வாணிகச் சிறப்பினைப் பற்றிப் பெரிதும பாராட்டி எழுதியுள் ளார்கள. சுந்தர பாண்டியன, மலிகுல்-இஸலாம ஜமாலுத் தீன என்பவருக்கும மற்ற வணிகாகளுக்கும ஒவ்வொரு வரு டத்திலும கைஸதீவுக் குதிரைகள ஆயிரதது நானூறு இறக்கு மதி செய்யவேணடு மென றும, பாரசீக வளைகுடாவிலுள்ள மற்றைத்திவுக் குதிரைகள எத்தனை கொணடுவர முடியுமோ அத்தனையும கொண்டுவரலா மென றும அனுமதியளித்திருந்த தாக வஸ்ஸாப் ஆசிரியர் கூறுகிறார்,

மேற்கூறியவாறு வாணிகம் செய்துவந்த முஸ்லிம்களின் செல்வாக்கு பன்னிரண்டாம் நூற்ருண்டில் பாண்டியநாடு முழுவதும் பரவியிருந்தது. ஜமாலுத்தீன்என்பவர் குதிரைவாணிகத்தில் புகழ் பெற்றவர். அதனோடு செல்வாக்கும் மிக்கவராகையால், பாண்டியஅரசரின் அரசியல்அலுவல்களிலும் முக்கியப் பங்கெடுத்து வந்தார். சுந்தர பாண்டியன், வீர பாண்டியன் ஆகிய இவ் விருசகோதரர்களுக்கிடையே போர் நேர்ந்த போது முஸ்லிம்களின் உதவியைக்கொண்டு சுந்தர பாண்டியன் தன் ஆட்சியை மதுரையில் நிலை நாட்டினன். மலிகுல்–இஸ்லாம் ஜமாலுத்தீன்என்பவரின் சகோதரர் மலிக் அஃஜம் தகிய்யுத்தீன் சுந்தர பாண்டியனுக்கு அமைச்சராய் இருந்தார். தகிய்யுத்தீன் திறமையுடன் தம் வேலையைக் கவனித்துவந்ததனால், பத்தன் فتن (கீழக்கரை), மலிபத்தன் ملى فتن (நாகபட்டினம்), காயல் ஆகிய நகரங்களுக்கு சுந்தரபாண்டியனால் அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்.

சுந்தர பாண்டியன் 1293–ஆம் ஆண்டில் இறந்தபின், அவன் சகோதரன் வீரபாண்டியன் மதுரைவேந்தனய் ஆட்சி செய்த போது தகிய்யுத்தீன் பாண்டியனுடைய மந்திரியாயிருந்து அரசன் செலுத்த வேண்டிய அதிகாரம் முழுவதையும் தானே செலுத்தி வந்ததாக வஸ்ஸாப் ஆசிரியர் கூறுகிருர். ஆனால், சுந்தர பாண்டியன் காலமான பின், ஜமாலுத்தீன் என்பவரே மதுரையில் சுல்தானய் ஆட்சி புரிந்தாரென்று ராஷிதுத்தீன் என்னும் ஆசிரியர் கூறுகிருர்.

ஆகலின், பாண்டியநாட்டில், முக்கியமாகக் காயல்துறைமுகப் பட்டினத்தில் முஸ்லிம்களின் செல்வாக்கு, பெருமை, புகழ் முதலியவை நிறைந்திருந்தனவென்பது நன்கு புலனகும்.

புன்னைக்காயல்

புன்னைக்காயல் பழையகாயலிலிருந்து தென் கிழக்கே இரண்டே முக்கால் மைலிலும், காயல்பட்டினத்திலிருந்து வடக்கே ஐந்து மைலிலும், ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து கிழக்கில்

தென்கிழக்கே பதினைந்து மைலிலும, திருநெல்வேலியிலிருநது கிழககில் முபபத்தொரு மைலிலும மனஞா வளேகுடாவின வட மேறகு எலலேயில் இருககிறது. புனனைககாயலின அக்ஷாம்சம 8°. 38', 78° 10'.

காயல்துறைமுகம கைவிடப்பட்டபின, புனனேக்காயல் தோனறியது எனறு அவ்வூர்மக்களே கூறுவா. அவவிவரம, புனேககாயல் எனற பெயராலே நனகு விளஙகும. ‘புனே’ எனற சொலலுககுப புதியது எனறு பொருள.

புனனேககாயல் போாததுகேயா வசமிருந்த போது, அவர்கள 1551–ஆம ஆணடில் இரண்டுஆஸபததிரிகளேயும ஒரு பளளிககூடத்தையும ஏறபடுததிஞர்கள். போர்த்துகேயா மலேயாளக் கரையில முஸலிமகளே ஒடுக்கி அவாகளுடைய வியாபாரசசெல்வாககைக குறைக்க விடாமுயறசியுடன விரோதம பாராட்டியே வந்தாாகள. அதனுல், சுமார் எழுபது வருடகாலம (கி. பி. 1500–1570) இரு கூட்டத்தாருக கிடையே பல சணடைகள மேறகுக கரையிலும கிழககுக்கரையிலும் நிகழநதன. கி. பி. 1538–ஆம ஆணடு முதல 1568–ஆம ஆணடுவரை புனனேக்காயலில பல போாகள நடநதிருக்கினறன. முஸ்லிமகள சில சமயங்களில் வெறறியும சில சமயங்களில் தோல்வியும் அடைந்திருககிஞர்கள.

போர்த்துகேயா விசயநகரஅரசருடன போர் நிகழத்திய போது, புனனேக்காயல விசயநகரஅரசர்கைவசம் ஆயிறறு. கிறிஸதவர்கள புனனேக்காயலில் இருந்த தஙகள் கோட்டையை கி. பி. 1553–ஆம் ஆணடில் இநதுக்களிடமிருந்து திருமபவும் கைப்பறறிஞர்கள. டசசுதேயத்தவரும ஆஙகிலேயரும வியாபாரம செயய இந்தியாவுக்கு வந்தபோது, புன்னேக்காயல் ஓா சிறந்த வியாபாரத்தலமாக இருநதது. முதலில், டச்சுக்காரர் அஙகுச செலவாககையப பெறறிருந்தாாகள்; பிறகு, அவர்களுககும ஆங்கிலேயருககும அடிககடி போர்கள நடநதன; இறுதியில கி. பி. 1782–ஆம் ஆண்டில், புனனேக்காயலிலிருந்த டசசுக்காரரின தொழிறசாலே ஆஙகிலேயரால் அழிக்கபபட்டது.

தென்காயல்

தென்காயல் என்பது கீழக்கரைக்கு மற்றொரு பெயர். அந்நகருக்கு பௌத்திரமாணிக்கப் பட்டினம், அனுத்தொகை மங்கலம், செம்பிநாடு, நினைத்தது முடித்தான்பட்டினம், வகுதை, வச்சிரநாடு முதலிய பெயர்களும் வழங்கியதாகத் தெரிகிறது.

சாலிவாகன சகாப்தம் 1790–ஆம் ஆண்டு வரை எழுதப் பட்டு வந்த தஸ்தாவேஜு-களில் அனுத்தொகைமங்கலம், நினைத்தது முடித்தான்பட்டினம், செம்பி நாடு என்ற மூன்று பெயர்கள் கீழக்கரையைக் குறித்து வழங்கி வந்திருக்கின்றன.

தென்காயலுக்குக் கீழக்கரை என்ற பெயர் எப்பொழுது எக்காரணத்தால் வந்ததென்று தெரியவில்லை. ஆனால், வள்ளலார் காலத்தில் கீழக்கரை என்ற பெயர் இருந்ததாகக் கும்பெனியாரின் தினசரிக்குறிப்புகளிலிருந்து அறிகிறோமாத லின், சுமார் முந்நூற்றைம்பது வருடங்களாக அப்பெயர் வழங்கிவருகிறதென்று கொள்ளலாம். கீழக்கரை யென்று பெயர் வந்தகாரணம் சரித்திரவாயிலாகத் தெரியவில்லை.

கீழக்கரைவாசிகள் கீழ்க்கண்ட காரணம் கூறுகின்றனர்: ஒரு காலத்தில் அப்பட்டினம் கீழக்கரை, மேலக்கரை, கேணிக் கரை என்று மூன்று பிரிவாக வழங்கிவந்தது. கீழக்கரை மேலக்கரை என்ற இரு பாகங்களும் கப்பல்கள் வந்து தங்குவ தற்குத் தக்க துறைமுகங்களாயும் கப்பல்களைப் பழுதுபார்க்கப் போதியவசதி யுள்ளனவாயும் இருந்தன. கேணிக்கரை என்பது கப்பற் பிரயாணிகள் குடி தண்ணீர் எடுத்துக்கொள்வதற்குத் தண்ணீர்த் துறையாய் இருந்தது. காலப்போக்கில் மேலக் கரையிலிருந்து கடல் விலகியதனால் துறைமுகம் அழிந்து போயிற்று. கீழக்கரையே துறைமுகமாக நிலைத்திருந்தது. அதனால், கீழக்கரை என்ற பெயரே ஊருக்கும் வழக்கில் வந்தது. மேலக்கரை யென்பது இக்காலத்தில் நாடார் குடி யிருக்கிற தலமாய் இருக்கிறது. கேணிக்கரை இப்பொழுதும் கடலோரத்தில் ஒரு பாகத்துக்குப் பெயராக வழங்குகிறது.

தென்காயல் என்பதற்கு அழகிய காயல் என்பது பொருள். மனத்தைக் கவரக் கூடிய பல நிறமுள்ள முத்துக்

களும், ஆணி முத்துக்களும், வைரமுத்துக்களும், அகப்படுகிற கடற்கரையோரத்தில் அமைந்திருந்ததனால் தென்காயல் என்று வழங்கியதாகத் தெரிகிறது. வெனிஸ் நகரத்திலிருந்து கீழ்நாடுகளுக்குப் பிரயாணம் செய்த மார்கோபோலோ கி. பி. 1292-ஆம் ஆண்டில் காயல்துறைமுகத்துக்கு வந்தபோது மாபர் பிரதேசத்தில் முத்துக் குளிக்கப்படுகிற இடத்தையும் அதன் விவரங்களையும் விரிவாக வரைந்துள்ளார். மாபரில் சலாபத் துறைகள் இருக்கின்றன என்று கூறியவர் துறைமுகங்களின் பெயர்களைக் குறிக்கவில்லையானாலும், முத்துக் குளிக்கிற இடம் மன்னார் வளைகுடாவிலே, கிழக்குக் கரையில், இராமேசுவரத்திலிருந்து கன்னியாகுமரி வரையுள்ள இடத்தைத்தான் குறிக்குமென்பதைத் தமிழர்எல்லாரும் நன்கு அறிவர். அத்துறைமுகங்களுள், கீழக்கரையும் பெரியபட்டினமுமே புகழ் வாய்ந்த நகரங்கள். மார்கோபோலோ, பொதுவாக முத்துச் சலாபங்கள் இருக்கின்றனவென்றது இந்த இரண்டு பட்டினங்களையுமே குறிக்கும். அவற்றுள், கீழக்கரைதான் மிகவும் செல்வாக்குள்ள பட்டினமாக இருந்திருக்க வேண்டுமென்பது மற்ற அறபிஆசிரியர்கள் மூலமாக நன்கு தெரிகிறது. திமிஷ்கி (கி.பி. 1340) எழுதிய புத்தகத்தில், மாபர்கரையில் பாத்னி فتنى என்ற ஒரு நகரைக் குறித்திருக்கிறார். இப்னுபத்தூதா என்ற மொராக்கோ தேசத்துப் பிரயாணி (1344) மாபர் கரையில் பத்தன் என்ற ஒரு நகரைப்பற்றிக் கூறுகிறார். இவர்கள் எழுதியவற்றை ஆராய்ந்தால் பாத்னி, பத்தன் என்று குறிப்பிட்ட நகரங்கள் கீழக்கரையைத்தான் குறிக்கும் என்று எண்ண இடமிருக்கிறது.

பாத்னி, பத்தன் என்பன அறபியர்களால் கொடுக்கப்பட்ட சுருக்கப்பெயர்களாக இருக்கலாம். இக்காலத்தில் சென்னப்பட்டினம் என்ற பெயர் சுருக்கமாக, 'பட்டினம்' என்று வழங்குவதுபோல அறபியர் மாபருக்கு வந்த காலத்தில் கீழக்கரைக்கு வழங்கப்பட்டு வந்த ஒரு நீண்ட பெயரைச் சுருக்கி, பத்தன் என்று வழங்கிவந்திருக்கலாம். முழுப்பெயர் என்னவென்று தெரியவில்லை. ஒருகால் பௌத்திரமாணிக்கப் பட்டினம் என்ற நீண்ட பெயரை அறபியர் பாத்னி என்றும் பத்தன் என்றும் சுருக்கிக் கூறியிருக்கலாம்.

இரு அறபி ஆசிரியர்களுள் இப்னுபத்தூதா என்பவர் பத்தன் என்ற ஊருக்கு நேரில் சென்றவர். இப்னுபத்தூதா கி.பி. 1344-ஆம் ஆண்டில் இலங்கைக்குப் போய் உலகுக்கு மூலபிதாவாகிய பாவா-ஆதம்அவர்களின் பாதச்சின்னங்களைத் தரிசித்து விட்டு, காலி (Galle) நகர்வழியாகக் கொழும்புக்குச் சென்று, பிறகு மாபருக்குக் கப்பலில் பிரயாணமாகி வரும்போது மன்னார் வளைகுடாவில் புயலில் அகப்பட்டுப் பல ஆபத்துக்களினின்றும் தப்பி, ஹர்காதுக்குச் هركاث (ஆத்துக்காடு) சமீபத்தில் வந்து சேர்ந்தார். அச்சமயம் மதுரையில் சுல்தான் கியாசுத்தீன் என்பவர் ஆட்சி புரிந்து வந்தார்.

சுல்தானைச் சந்தித்த விவரத்தை இப்னுபத்தூதா பின் வருமாறு கூறுகிறார் :

'மாபர் கரையில் சேர்ந்தவுடன், அங்குள்ள மனிதர்களிடம் நாங்கள் சுல்தானுக்கு நண்பர்கள் என்று கூறினோம். அவர்கள் நாங்கள் வந்த விவரத்தைச் சுல்தானுக்குத் தெரிவித்தார்கள். சுல்தான் இரண்டுநாள் பயணதூரத்தில் பாளையம் இறங்கியிருக்கிறார் என்ற விவரம் தெரிந்து, நானும் எனக்கு நேர்ந்த இன்னல்களை யெல்லாம் எழுதிச் சுல்தானுக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். மூன்று நாட்களுக்குப் பின் சுல்தானுடைய குதிரைவீரர்கள் பல்லக்குடன் வந்து என்னையும் என் ஆட்களையும் அழைத்துச் சென்றார்கள். வழியில் ஹர்காது என்ற இடத்தில் இரவைக் கழித்து, மறுநாள் சுல்தான் பாளையம்இறங்கியிருக்கிற இடத்தை அடைந்தேன் ...... பிறகு சுல்தான் அவர்களைச் சந்தித்து, மஹல்லதீவிற்கு ஒரு படையை அனுப்ப வேண்டுமென்று கூறினேன். அவரும் அதற்கிணங்கி, ஐந்து தினங்களுக்குள் படையுடன் என்னை மஹல்ல-தீவிற்கு அனுப்புவதாகச் சொன்னார். ஆனால், சுல்தானின் கப்பல் தலைவர் மூன்று மாதகாலத்திற்குப் பிறகு தான் கப்பற் பிரயாணம் செய்யக் காற்று வசதியாக இருக்குமென்று கூறினார். அப்பொழுது, சுல்தான் தாம் பாளையம் இறங்கியிருக்கிற வேலை முடியும்வரை, என்னைப் பட்டினத்துக்குப் போயிருக்குமாறு கூறினார்; அங்கிருந்து தம்முடன் மதுரா (மதுரை) என்ற தலை நகருக்குத் திரும்பிப் போகலாம் என்றார்.'

சுல்தான் கூறியவாறே, இப்னுபத்தூதா பத்தனுக்குச் சென்றார். அவர் பத்தனைப் பற்றிக் கீழவருமாறு கூறுகிறார்:

'பத்தன ஓர் அழகான நகரம். அதன் துறைமுகம மிகவும வனபபு வாயந்தது. கரையோரத்தில் மிகப் பாரமான பெரிய மரக்கட்டைகளை நாட்டி, அவறறின் மீது அழகான ஒரு கூடாரம போடப பட்டிருக்கிறது. போர்ககாலஙகளில், துறை முகத்திலுள்ள மரககலங்கள அந்தக் கூடாரத்துடன சேர்த்துக் கட்டப பட்டிருப்பதனால், எதிரிகள அவற்றைக கைப்பற்ற முடிவதில்லை.'

'அபபட்டினத்தில் கல்லாலான அழகிய பளளி வாசல் ஒனறு இருக்கிறது. ஆஙகு திராட்சைப பழம அதிகமாகக் காணபபடுகிறது. உயர்தர மாதுளம பழமும கிடைக்கின்றது.'

'அப்பட்டினத்தில், நிஷாபபூரிலிருந்து வந்த ஷைகு முகம்மது மஜ்தூபி அவர்களைச் சந்திததேன. அவர் சித்தம் தெளியாத நிலையில் இருக்கிற பக்கீர்கள குழுவினைச் சேர்ந்தவர். அவர் திருமுடி விரிந்து தோள்வரை தொஙகிக்கொண்டிருக்கும. அவருடன் ஒரு சிஙகம இருந்தது. அதை நனகு வசப்படுத்தி யிருந்ததனால் அது அவருடன இருந்த மற்ற தர்வேஷகளுடன சாதுவாக உறைந்து உணவு அருந்தும். அவருடன் முபபது தர்வேஷகள இருநதனர. அவர்களுள ஒருவர் மானை வளர்த்து வந்தார. சிஙகமும மானும ஒரே இடததில் இருந்தாலும அனபாகப் பழகிவந்தன.'

'நான் பட்டினததில் இருந்தபோது சுல்தான் அங்கு வந்தார். அவரைச் சந்தித்தேன். அவர் ஒரு வாரம பட்டினத தில் தங்கியபின தலை நகராகிய மதுரைககுப பிரயாணமானார். நான் மேலும பதினைந்து நாட்கள் பட்டினத்தில் தஙகியிருந்து விட்டு மதுரைக்குச் சென்றேன ...... மதுரையை அடைந்த இரண்டுவாரததிற்குபபின, சுல்தான் கியாசுத்தீன காலஞ் சென்றார். அவருக்குபபின், அவர்மருமகன நாசிருத்தீன் பட்டத்திறகு வந்தார்.

மதுரையிலிருந்து பட்டினததிற்குத் திருமபினேன. அங்கே அறபு நாட்டின் தெனமேறகு மாகாணமாகிய எமன்பிரதேசத்

பேருவளை (?)



மேலக்கரையில் மின்ஹாஜ் பள்ளி

சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பள்ளிவாசல் என்பர்



கிழக்கரையின் பழைமையைக் காட்டும்
கடற்கரைப் பள்ளி

திற்குப் புறபபட எட்டுககபபல்கள் தயாராயிருந்தன. அவற்றுள ஒனறில் நான ஏறி முதலில் கொல்லம துறைமுகம வந்து சேர்ந்தேன்.

இபனுபத்தூதா கூறுவதிலிருநது, மாபர்கரையில் மூன்று ஊர்களின் பெயரகள தெரிகினறன. அவறறுள, மதுரா என பது மதுரை; ஹாகாது என்பது ஆததுக்காடு. இது கீழக் கரைக்குக் கிழக்கே சுமார் மூன்று மைல் தொலைவில் உளது. அதை அடுதது, கொடடைகுடி எனற ஒரு சிறறுறு கடலில் சங்கமமாகிறது. பத்தன் எனபது கீழக்கரைப்பட்டினத்தைக் குறிக்கும. அஙகு, இபனுபததூதா கல்லாலாகிய அழகிய பளளிவாசல் ஒனறைப பார்த்ததாகக் கூறுவதனுல், அவவூர் கீழக்கரையைத்தான குறிககு மெனபதில் ஐயமில்லை.

மேலே கூறிய வரலாறறால, பதின்மூனரும் நூற்ருண்டுக்கு முனபே தென்காயல என்ற பெயருளள கீழக்கரைபபட்டினம மாபர்க கரையிலுளள முத்துச்சலாபத துறைகளுள ஒன்ருய இருந்திருககிறது எனபது நனகு விளஙகும.

கீழக்கரையிலுள்ள கல்லாலான அழகிய மஸ்ஜிதை அங்கு வசித்துவந்த பிரபுக்கள் கட்டியிருக்கலாம. இனறளவும் அது பழையகுத்பாபபளளி எனறு வழங்குகிறது. மிகப பழைய பள்ளியானதனுல் பலமுறை செபபனிடப்பட்டிருக்கிறது; அநேக மாறுதல்கள் ஏற்பட்டிருககின்றன.

காயற்பட்டினம்

இது திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கிற ஒரு துறைமுகப்பட்டினம். இதன அக்ஷாமசம் 8°34′ 78° 10′. ஆகும். இது பழைய காயலிலிருந்து தெற்கில் தென்கிழக்கே எட்டு மைலிலும், புன்னைக்காயலிலிருந்து தெற்கே ஐந்துமைலிலும், ஸ்ரீவைகுண்டத்திலிருந்து கிழக்கில தெனகிழக்கே பதினைந்து மைலிலும, திருநெல்வேலியிலிருந்து கிழக்கில் முபபத்து மூனறு மைலிலும, வீரபாணடியனபட்டினத திலிருந்து வடக்கே மூனறு மைலிலும, கடலுக்கு மேற்கே அரைமைல் தூரத்திலும இருககிறது. இப்படடினம் தாமிர

வருணிநதிக்கு வடக்கிலும், மன்னர் வளைகுடாவின் மேற்குக் கரையிலு மிருக்கிறது. காயல்துறையின் செல்வாக்குக் குறைந்தபின்னரே, காயற்பட்டினம் தோன்றியிருக்கவேண்டும். ஏனெனில், புராதனப்பட்டினம் என்று குறிப்பிடத்தக்க சின்னங்களோ, பண்டைக்காலத்தில் அயல்நாட்டு வாணிகம் அங்கு நடந்து வந்ததற்குரிய அடையாளங்களோ காணப்படவில்லை. மார்கொபோலோ கண்ட காயல்துறை புறக்கணிக்கப்பட்ட பின்பே அவ்வூர் ஏற்பட்டிருத்தலால், சமீபகாலத்திய நகரே என்று காயல்பட்டினவாசிகளே ஒப்புக்கொள்கின்றனர். அந்நகரின் முதற்பெயர் சோனகர்பட்டினம் என்பது. காயல்பட்டினம் என்ற பெயரைப் பண்டைநாளில் துலங்கிய காயல் துறையை ஞாபகம் ஊட்டுவதற்குக் கொடுக்கப்பட்டது என்று கூறுவர். இங்ஙனம் சோனகர்பட்டினம் என்ற பெயர் காயற்பட்டினம் என்று எப்பொழுது மாற்றப்பட்டதென்ற விவரம் தெரியவில்லை.

காயற்பட்டினம் என்ற பெயருள்ள துறைமுகம் ஒன்று இருந்ததாக மார்கொபோலோ முதலிய கிறிஸ்தவப்பிரயாணிகளாவது, இப்னுபத்தூதா வரையுள்ள அறபிஆசிரியர்களாவது, வேறு பிரயாணிகளாவது தாம் எழுதிய புத்தகங்களில் எங்கும் குறிக்கவில்லை. போர்த்துகேயர் இந்தியாவுக்கு வந்து மேற்குக்கரையிலும் கிழக்குக்கரையிலும் தம்முடைய ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் நிலைநாட்டுதற்கு எண்ணிலாத கஷ்டநஷ்டங்களுக்கிடையே முயற்சிசெய்துவந்தார்கள். அப்பொழுது, தென்னாட்டிலுள்ள அரசுகளோடு — முக்கியமாகக் கள்ளிக்கோட்டை மன்னர் சாமூத்திரியோடும் விசயநகர அரசோடும் பீஜப்பூர் சுல்தான்களோடும் — பல போர்கள் செய்திருக்கிறார்கள். இதைப்பற்றிய வரலாறுகள் சரித்திரங்களில் அதிகமாக் காணப்படுகின்றன. அவற்றுள் ஓர்இடத்திலாவது காயற்பட்டினத்தைப்பற்றிய குறிப்புக் கிடைத்திலது. புன்னைக்காயலைப் பற்றிய விவரங்கள்தாம் கிடைக்கின்றன. காயற்பட்டினம் என்ற பெயரால் விவரங்கள் கிடைக்காவிடினும் சோனகர்பட்டினம் என்ற பெயராலாவது குறிப்பு அகப்படுமா என்று தேடினல், அதுவும் கிடைத்திலது. இக் காரணங்களால் டாக்டர் கால்டுவெல் சொல்வதுபோலக்

காயற்பட்டினம் சமீபகாலத்தில்தான் தோன்றியதென்று கூறவேண்டியிருக்கிறது. முஸ்லிம்களின் மார்க்க நூல்களில், காயற்பட்டினத்தைப்பற்றிய விவரங்கள் கிடைக்கின்றன. நாகூரில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிற குத்புல்-அக்தாப் அப்துல் காதிறு ஸைய்யிது ஷாஹு-ல் ஹமீதுவலி (1504-1567) என்பவரது புகழ்ச்சி, நற்குணம், நன்னெறி ஆகியவற்றைப் பற்றி மஹ்மூது தீபி என்பவர் அறபிபாஷையில் அழகாக எழுதியுள்ளார். தீபி அவர்கள் ஸதக்கத்துல்லா வலி அவர்களின் மாணுக்கராகையால், பதினெட்டாம் நூற்ருண்டின் முற்பகுதியில் வாழ்ந்துவந்தவர் என்று அறிகிறோம். அன்ஞர் அறபி பாஷையில் எழுதிய வரலாற்றில், நாகூர் வலி அவர்கள் காயற்பட்டினத்துக்குப் போயிருந்ததாகக் கூறுகிருர். அவ்வாறே, அப் பெரியாரைப் பற்றிக் கூறுகிற கன்ஜு-ல்-கருமத் என்னும் தமிழ், அறபுத்தமிழ் ஆகிய புத்தகங்களிலும் நாகூர் ஆண்டவர் காயற்பட்டினத்துக்குப் போயிருந்த விவரத்தை அறிகிறோம்.

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட திருநெல்வேலி ஜில்லா கெஜட்டியர் என்ற புத்தகத்தில் காயற்பட்டினத்தின் விவ்ரம் கீழ்க் காணுமாறு கூறப்பட்டிருக்கிறது.

‘ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், அறபுநாட்டிலிருந்து முஸ்லிம்கள் தென்னிந்தியாவிற்கு வந்து, பாண்டியவேந்தனின் அன்பிஞல் அவனிடமிருந்து நான்கு மைல் நீளமும் ஒன்றரை மைல் அகலமுமுள்ள இடத்தைப் பெற்றுக் குடியேறிஞர்களென்று காயற்பட்டின வாசிகள் கூறுகின்றனர். அதற்குப் பின், அப் பட்டினத்தைப்பற்றிய விவரம் தெரியவில்லை. பல நூற்ருண்டுகளுக்குப் பின், மதுரையில் அரசுபுரிந்த திருமலை நாயக்கர் அவ்வூருக்குச் செப்பேடு வழங்கியதாகத் தெரிகிறது. ஏனெனில், சோனகர்பட்டினம் என்ற பெயருள்ள காயற்பட்டினத்தினின்று மக்கள் பலர் பிறஊர்களுக்குச் சென்றுவிட்டதஞல் ஊர் கலைந்துவிட்டது. அந்தச் சீர்கேடான நிலைமையைத் தெரிந்த திருமலைநாயக்கர் ஊரின் தலைமைக்காரரை வருவித்து, கலைந்து போன மக்களை மீண்டும் கூட்டும்படி சொன்ஞர். அப்பொழுது தலைமைக்காரராகிய முதலியார்

பிள்ளைமரக்காயருக்குத் திருமலைநாயக்கர் ஒரு செப்பேடு வழங்கினர்.' இவ்விவரங்களைக் காயற்பட்டின வாசிகள் கூறுகிறார்கள் என்றுதான் எழுதப்பட்டிருக்கிறதேயொழிய, இக்கூற்றிற்கு எவ்வித ஆதாரமும் காட்டப்படவில்லை.

ஜில்லா கெஜட்டியரில் கூறப்பட்ட விவரத்தை நன்கு ஆராயுமிடத்து, இரண்டு முக்கியக்கருத்துக்கள் வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றன.

1. ஆயிரம்வருடங்கட்கு முன் முஸ்லிம்கள் சோனகர் பட்டினம் என்ற காயற்பட்டினத்திற் குடியேறியது.

2. இற்றைக்குச் சற்றேறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்குமுன் கலைந்திருந்த காயற்பட்டினம் மதுரைத்திருமலை நாயக்கர்முயற்சியால் நன்னிலைக்குக் கொண்டு வரப்பட்டது.

இவ் விரண்டுகருத்துக்களையும், இதுவரை நாம் ஆராய்ந்து தெளிந்த பொருள்களையும் சேர்த்துநோக்குமிடத்து, ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் முஸ்லிம்கள் குடியேறியதாகச் சொல்லப்படுகிற இடம் மார்கொபோலோ கண்ட காயல்துறையேயன்றி வேறு தலமாக இருக்கமுடியாது. இப்போதுள்ள காயற்பட்டினம் பதினன்காம் நூற்றுண்டில் காயல்துறை புறக்கணிக்கப்பட்டபின் எழுந்த ஊரே. காயல்துறைமுகம் கைவிடப்பட்டபின் முஸ்லிம்மக்கள் தென்கரையிலுள்ள பலதுறைமுகப்பட்டினங்களுக்குச் சென்றனர். காயலுக்கு அண்மையிலும் புதியஊரை அமைத்து வாழ்ந்தனர். புதிதாகக் கூட்டிய ஊர்வகையிற் சேர்ந்தது சோனகர்பட்டினம் என்னலாம். அதன் செல்வாக்கும் பெருமையும் எக்காரணத்தாலோ நாளடைவிற் குன்றியதனல் அது கலைந்திருக்கலாம். பின்னர், தமிழ்நாட்டுவேந்தனெருவன் அவ்வூராரைத் திரும்பவும் கூட்டிச் செல்வாக்குப் பெற உதவி செய்திருக்கலாம். ஆகவே, ஆயிரம்வருடங்களுக்குமுன் முஸ்லிம்கள் குடியேறிய தலம் புறக்கணிக்கப்பட்டதென்றும், இப்பொழுது அவ்விடத்திற் சிறுகிராமமாயிருப்பதே பழையகாயல் என்றும், சோனகர் பட்டினம் என்ற காயற்பட்டினம், காயல்துறைமுகம் புறக்கணிக்கப்பட்டபின் தோன்றியதென்றும் கொள்ளலாம்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பாண்டியநாட்டு வேந்தன் முஸ்லிம்களுக்கு அன்புடன் அளித்த இடத்தைப்பற்றிச் சரித்திர வாயிலாக எவ்விதஆதாரமும் கிடைத்திலது. அங்ஙனமே மதுரைத் திருமலைநாயக்கர் அளித்த செப்பேட்டிற்கும் எவ்வித ஆதாரமும் கிடைத்திலது.

இவ் விரண்டிற்கும் ஆதாரமாக இரண்டு பட்டயங்கள் இருக்கிற விவரத்தை "வான்புகழ் காயற்பட்டினம் சரித்திரம்" என்ற நூலிற் காண்கிறோம். முஸ்லிம்கள் காயற்பட்டினத்தில் ஒன்பதாவது நூற்றாண்டின் இடையில் வந்து குடியேறினார்கள். அப்போது பாண்டிய நாட்டு வேந்தன் ஜெயவீரராஜ-ுகாரு, 847-ஆம் ஆண்டில், முஸ்லிம்களுக்கு ஒரு செப்பேடுமூலமாகச் சில சுதந்திரங்கள் வழங்கியிருக்கிறான். அச் செப்பேட்டில் ஜெயவீரராஜ-ுகாரு என்று தெலுங்கில் கையொப்பமிட்டிருக்கிறானென்று ஓரிடத்திலும், கி. பி. 1553-ஆம் ஆண்டில், மதுரையில் அரசு புரிந்த திருமலைநாயக்கர் காயற்பட்டின முஸ்லிம்களுக்கு ஒரு செப்பேடு வழங்கியிருக்கிறாரென்று பிறிதோரிடத்திலும், அந்நூலில் கூறப்பட்டிருக்கிறது. இவ் விரண்டு செப்பேடுகளும் சரித்திரவாராய்ச்சிக்குச் சிறிதும் பொருத்தமற்றவை என்று நன்கு தெரிகிறது. கி. பி. 847-ஆம் ஆண்டில், பாண்டிய நாட்டில் ஜெயவீரராஜ-ுகாரு என்ற வேந்தன் அரசு செலுத்தியதாகச் சரித்திர வாயிலாக இன்றுவரை தெரியவில்லை. மேலும், ஜெயவீரராஜ-ுகாரு என்று தெலுங்கில் கையொப்ப மிடக்கூடிய வேந்தன்ஒருவன், தமிழ்நாட்டி லிருந்தானென்று சொன்னால், வியப்பும் நகைப்பும் உண்டாகுமன்றோ! மதுரைத் திருமலைநாயக்கர் கி. பி. 1553-ஆம் ஆண்டில் பிறந்திருப்பார் என்று நம்ப முடியாது. அவர் மதுரையில் ஆண்ட காலம் கி. பி. 1623–1659 என்று சரித்திரம் கூறுகிறது. ஆகலின், அந்நூலிற் கூறப்பட்ட இருசெப்பேடுகளையும் மீண்டும் ஆராயவேண்டிய அவசியம் இருக்கிறது.

கீழக்கரையும் சீதக்காதியும்

மேலே கூறியவற்றால், காயல் என்ற பெயருடன் சேர்க்கப்பட்ட ஊர்கள் நான்கு இருக்கின்றனவென்று கண்டோம்.

அவற்றுள் ஒன்றில், சீர்த்திவாய்ந்த சீதக்காதிவள்ளலார் பிறந்திருப்பதனுல் ஒவ்வோரூராரும், தத்தம் ஊரில்தான் அவர் பிறந்தார் என்று உரிமைபாராட்டுவது இயற்கையேயாகும் பழையகாயல், புன்னைக்காயல் என்ற இரண்டு ஊர்களிலும். முஸ்லிம்களின் தொகை குறைந்திருப்பதனுல் அவர்கள், வள்ளலார் தம் ஊரில் பிறந்தார் என்று சொல்ல முன்வருவதில்லை. கிழக்கரையிலும் காயற்பட்டினத்திலும் முஸ்லிம்களின் தொகை அதிகமாயிருப்பதனுல் அவர்கள், வள்ளலார் தத்தம் ஊரில் தான் பிறந்தாரென்று வாதாடுகின்றனர்.

பொதுவாகப் பார்க்குமிடத்து, ஒருவர் ஓரிடத்தில் வாழ்ந்தார் என்று நிலைநாட்டுதற்கு, அவருடைய பெற்றோர், முன்னோர், உறவினர் முதலியவர்களின் பிறப்பிடத்தை அறிவது அவசியமாகும். ஒருநகரத்தில் பிறந்தவர் பெரும்புகழோடு விளங்கியது உண்மையாயின், அப்புகழுக்குக் காரணமாய் விளங்கிய சின்னங்கள் பல அந்நகரத்திலிருப்பது இயற்கையாகும். இவ் விருவகையாலும் நோக்கின், ஒருவர் பிறந்து வாழ்ந்த இடத்தை எளிதில் அறிந்துகொள்ளலாம். சீதக்காதியின் தாயைப்பெற்ற பாட்டனுரான வாவாலி மரக்காயர் என்னும் செல்வரும், சீதக்காதியைப் பெற்றெடுக்கப் பெருந்தவம் செய்த மவ்லா சாகிபு என்ற பெரியதம்பி மரக்காயரும் கிழக்கரையிலேயே பிறந்து, செயற்கரிய செயல்களைச் செய்து, புகழ் பெற்று விளங்கினுர்களென்பதை அறிகிறோம். இப்பெரியார்கள் கிழக்கரையில் உள்ள பழையகுத்பாப்பள்ளியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களது கல்லறையில், வாவாலி மரக்காயர்பெயரும் இறந்த நாளின் குறிப்பும் விளங்குவதை இன்றும் காணலாம்.

சீதக்காதிவள்ளலின் பந்துக்களனைவரும் கிழக்கரையிலேயே வசித்துவந்திருக்கிறார்கள். அவர்களுடைய சந்ததியாரும் இன்றுவரை அங்கேயே வசித்துவருகிறார்கள்.

வள்ளலாரின் அரண்மனையாகிய கல்வீடு சிதைந்த நிலையில் இன்றும் காணப்படுகிறது. அதன் அருகில் உமறுப் புலவருக்கும் மக்தூம் சின்னயினு வலியுல்லா அவர்களுக்கும் வள்ளலாரால் இனுமாகக் கொடுக்கப்பட்ட இல்லங்களும்

கீழக்கரையில் சீதக்காதியின் பாட்டனர் (தாயைப் பெற்ற தந்தை)
வாவாலி மரக்காயரை அடக்கம் செய்த இடத்தில் உள்ள கல்வெட்டு

[பின் பக்கம் பார்க்க

கல்வெட்டிற் கண்ட செய்தியின் சுருக்கம்

கொல்லம் 790-ஆம் ஆண்டு ஆனந்த வருடம் கார்த்திகை மாதம் 26-ஆந்தேதி வெள்ளிக்கிழமை (கி. பி. 1614-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ஆந் தேதி) வாவாலி மரக்காயர் இறந்ததாகக் குறிக்கப் பட்டிருக்கின்றது.

ஹிஜ்றி 1023-ஆம் வருடம் துல்கஃதா மாதம் 3-ஆந்தேதி ஆகிறது.



கீழக்கரையில் சீதக்காதியின் கல் வீடு
எஞ்சியுள்ள சுவரின் தோற்றம்



இழக்கரையில் சீதக்காதி கட்டிய குத்பா பள்ளி

அவர்கள் சந்ததியார்வசம பல நாட்கள் இருந்தன. ஸதக்கத துல்லாவலி அவர்களுககும் உமறுப புலவருககும வள்ளலாரால் ஏறபடுத்தப்பட்ட கலியாணமகிமைபபணம இனறும நடந்து வருகிறது.

கீழககரையில் கல்லால் கட்டபபடடு, சிற்பவேலைகளுடன் கூடி, காண்பவர்கண்களைக் கவரும வனபபுடன் காட்சியளிக்கும் பெரிய பளளியைக் கட்டியவர் சீதக்காதி வளளலே யாவரா. இது போனற அழகிய மஸஜிதுகளைக காண்ப தரிது.

ஸதககத்துல்லா வலீஅவர்கள அடங்கிய இடத்திலும, பட்டத்துமரக்காயர்அடஙகிய இடத்திலும வளளலார் வில்மச்சு மணடபஙகள் கடடியுளளாா.

இன்னோரன்ன பல சின்னங்கள கீழக்கரையில் இருக்கினறன.

கீழக்கரை பதினைன்காம் நூற்றுண்டிற்குமுன்னரே புகழ் பெற்று, சிறந்த துறைமுகமாக இருந்திருக்கவேண்டும. அந் நகரில் செல்வத்திற் சிறந்த சீமான்களும, அறிவிற்சிறந்த பெரியோர்களும், கடல்கடந்து செனறு பொருளீட்டிப் பெரும் புகழுடன் திரும்பிய பெருமக்களும் செறிந்து வாழுந்து விளங்கியிருந்தாலன்றி, சீதக்காதிவளளலாரை அந்நகர் ஈனறு உலகிறகு உதவ இயலாது எனறு கூறலாம்.

மற்றெருரு வகையில் ஆராய்வாம்: நொண்டிநாடகத்தில் சொல்லியுளளவாறு, நொண்டிஎனபவன சீதக்காதிவளளல் கீழக்கரையிலிருபபதை அறிந்து செனறபோது, வழியில் விளஙகிய பல இடங்களின் பெயர்களை முறையாகக கூறிக் கொணடே செல்கிருன. அப்பெயாகளெல்லாம் கீழக்கரைக் குச் செல்லும வழியையே குறிக்கினறன. நொணடி கீழக் கரைக்கு வடகோடி வந்ததும, அங்கிருந்த சிங்காரத்தோபபு, அதறகடுத்த தண்ணீர்பபந்தல், பெரியகுத்பாபபளளி, இன்றும சிறிதும் அழியாது கலவீடு எனனும பெயரால் வழங்கும வளளலாரின மாளிகை முதலியவறறைக குறிபபிடுகினருன். இவற்ருல் வளளலார் கீழக்கரையில் பிறந்து வாழுந்தவர் என்று துணியலாம,

'தென்காயல் பதியானே' என்ற தொடரில் உள்ள தென் காயல் என்பது கிழக்கரைக்குத் தெற்கேயுள்ள காயற்பட்டி-னத்தைக் குறிக்கும் என்று சொல்லுவர். தென்காயல் பதியானே என்ற தொடர் பூங்கோதை பாடியதாகக் கூறப்படும் விருத்தத்தில்தான் காணப்படுகிறது. அவள் மதுரையில் வாழ்ந்த தாசியாய் இருக்கலாம். மதுரைக்குத் தெற்கே கிழக்கரை இருப்பதனாலும், மன்னார்வளைகுடாக்கரைக்கு அருகே சதுப்புநிலத்தை ஒட்டி யிருப்பதனாலும், காயல்பதத்தோடு 'தென்' என்று இணைத்துத் 'தினங் கொடுக்கும் கொடையானே' என்ற அடிமுதலுக்கு, மோனையாகத் 'தென் காயல்' என்று பாடியிருக்கிறதாகத் தெரிகிறது. தவிர, சீதக்காதி வள்ளலாரைப் புகழ்ந்து பாடிய புலவர்களெல்லாரும் கிழக்கரைக்கு வடக்கேயிருந்து வந்தவர்கள்.

கடற்கரையின் ஓரமாக, சதுப்புநிலங்களை யொட்டியுள்ள கிழக்கரையைக் காயல் என்றும், காயல் என்ற சொல்லை இசைக்கு இணக்கமாக வேறு அடைமொழிகளோடு இணைத்தும் புலவர்கள் பலவாறு புகழ்ந்து பாடியுள்ளார்கள்.

பல நகரங்களுக்கு ஒரு பெயரே இருப்பதை உலகவழக்கில் காண்கிறோம். ஒரு பெரியார் அவர் வாழ்ந்த ஊரின் பெயரால் குறிப்பிடப்படும்போது, அப் பெயரைக்கொண்ட எல்லா ஊரினர்களும் தத்தம் ஊரில் அவர் வாழ்ந்தார் என்று கூற முடியுமா? உதாரணமாக, நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் தைக்காசாஹிபு அவர்களின் தந்தையாரான உமறுவலியுல்லா சாகிபு அவர்கள் பல கஸீதா (பிரபந்தம்) பாடியுள்ளார். அவைகளுள் ஒன்றில், 'இது காயல் உமறு வலியுல்லா என்பவரால் பாடப்பட்டது' என்று எழுதப்பட்டிருக்கிறது. காயல் என்ற சொல் அவர்பெயருக்கு முன் சேர்க்கப்பட்டிருப்பதனால் காயற்பட்டினம், பழையகாயல், புன்னைக்காயல் ஆகிய ஊர்களில் இருப்பவர்களெல்லாரும் தத்தம் ஊரில்தான் உமறு வலியுல்லா பிறந்தாரென்று உரிமை பாராட்ட இடம் இருப்பினும் அவர் பிறந்து வளர்ந்து அடங்கியது காயற்பட்டினமே என்பதை உலகம் அறியும். அங்ஙனமிருக்க, காயல் என்ற சொல்லுடன் இணைக்கப்பட்டுள்ள மற்றைய ஊரார் தங்கள்

ஊரில்தான பிறந்தாரென்று உரிமை பாராட்டல் எங்ஙனம் பொருந்தும்? அதுபோலவே இரணடு நகரங்களைக் குறிக்கும ஒரு பெயரைக் கொண்டு, அப் பெயர் ஓர் ஊரையே குறிக்கும் என்பது பொருந்துமா?

மற்றோர் உதாரணம கூறுவாம. பணடைககாலத்தில், அறபியர்களை இந்தியாவின் மேறகுக்கரைக்கு வாணிகத்திறகாக வந்தபோது, அப பகுதியை மலபார் எனறு வழங்கினார்கள், அனறுமுதல் அவர்கள தெனனாட்டிலுள்ள முஸ்லிமகள எல்லோரையும் மலிபாரி என்றும மலபாரி என்றும் அழைத்து வந்தார்கள.

இஹ்யாஉ-உலூம்-அல்-தீன் احياء علوم الدين என்ற நூலின் விரிவுரையாகிய 'இத்ஹாப்' اتحاف எனற நூலின் ஆசிரியர், காயறபட்டினத்தில் பிறந்து கீழக்கரையில நீண்டகாலம் வாழ்ந்து அடக்கம செய்யப பட்டிருககிற ஸதககத்துல்லா வலியவர்களை மலபாரி எனறு குறித்திருக்கிறார். அதனால், கேரள நாட்டு முஸ்லிம்கள ஸதககத்துல்லாவலி யவர்களைத தங்களூரில் பிறந்தாரென்று வாதாட முடியுமா?

மேற்கூறியவாறு, தென்கடலோரத்தில் நெய்தல்நிலத்தில் வாழ்ந்துவந்த முஸ்லிமமக்களையெல்லாம தமிழர்கள் காயலார எனறு அழைத்துவந்தார்கள். நாளிதுவரை, அப் பெயர் வழக்கில் இருக்கிறது. பண்டைக்காலத்தில், நெய்தல் நிலத்தில் வாழந்த முஸலிமகளின செல்வாக்கு மார்கொபோலோ குறித்த காயல்துறையின மூலமாகவே பெருகியது. அததுறை முகம கைவிடபபட்டபின்னரும, முஸ்லிமகள தம வாணிகத் தொழிலை மேன்மேலும நடத்திவந்ததனால் காயலின் பெருமையைக் கொண்டுசெலுத்தினார்கள; காயலார் எனற பெயரும் மறையவில்லை. காயலாரைப் பற்றிப புலவர்கள் புகழ்ந்தும் இகழ்ந்தும பாடியுள்ளார்கள். காயலைச்சேர்ந்த சீதக்காதியைப் போல் வரையாது கொடுக்கும் வள்ளல்களைப புகழநதும, மனத் திறகுப் பிடித்தமில்லாதபோது, மற்றக்காயலாரை இகழநதும் பாடியுள்ளார்கள.

நெய்தல்நிலத்து முஸலிமகள் பலர் வட்டித் தொழில செய்கிறவர்களாய் இருந்த போதிலும் காயறபட்டினத்து முஸ்லிம்

களுக்கிடையே அத் தொழில் செய்கிறவர்கள் இல்லையென்று சொல்லக் கூடிய அளவிற்கு மிகவும் குறைவாக இருக்கிறார் கள். கடன் கொடுத்து வட்டித் தொழில் செய்கிற முஸ்லிம் களைப் புலவர்கள் பலவாறு பாடியிருக்கிறார்கள். அப்பாடல் களிற் 'காயலார்' 'காயல்-மரக்காமார்' என்ற சொற்றொடர் களும், இந்துக்கள் இயற்றிய வேறு சில்லறை நூல்களில் காய லாரைப் பற்றிய செய்திகளும் வருகின்றன. அவையெல்லாம் தென் கடலோரத்தில் வசித்துவந்த ஷாபிமுஸ்லிம்களைக் குறிக் கின்றனவே யொழிய, இக்காலத்தில் திருநெல்வேலிமாவட்ட த்தில் உள்ள புண்ணியத்தலமாகிய காயல்பட்டினத்தைக் குறிப்பதில்லை.

'தென்காயல் பதியானே' என்று வருகிற சொற்றொடர் காயல்பட்டினத்தையே குறிக்கிறதென்று கூறுகிறவர்கள், நொண்டி நாடகத்தில் 'வகுதைச் செய்தக்காதி', 'வகுதை நகர் வரு கருணைவாருதி' என்பன போன்ற தொடர்களைக் கவனிக் கவில்லை. இவ் விருவகைச் சொற்றொடர்களும், சீதக்காதி வள்ளலையே குறிக்கின்றன. வகுதை என்பது கீழக்கரைக்கு மற்றொரு பெயர். வகுதை கீழக்கரையைக் குறித்தால், தென் காயல் அந்த நகரத்தைத்தானே குறிக்க வேண்டும். சீதக் காதியைப்போல், தென்காயலில் ஒரு வள்ளல், வகுதையில் ஒரு வள்ளல் இருந்திருப்பாரென்று சொல்லமுடியுமா? ஆகை யால் தென்காயல், வகுதை இவ் விருபெயர்களும் கீழக்கரைக்கு வழங்கிய பெயர்களே என்பது வெளியாகின்றது.

மேலே கூறப்பட்ட பலவகைக் காரணங்களை யெல்லாம் ஒருங்கே சிந்திக்கும்போது, சீதக்காதிச் சீமான்—கொடையிற் சிறந்த கோமான்—வான்புகழும் வள்ளலார்—பிறந்து வாழ்ந்த நகரம் கீழக்கரையே என்பது துணியப்படும்.

சீதக்காதியும் சேதுபதியும்

சீதக்காதி வள்ளல் கீழக்கரையில் தொல் குடியிற் சீரும் சிறப்பும் வாய்ந்த உத்தம ரென்றும், இராமநாதபுரத்தை ஆண்ட கிழவன்சேதுபதியின் நெருங்கிய நண்பரென்றும் முன் னமே கூறினோம். அவற்றைத் தொடர்ந்து மேலும் சில செய்திகளைக் கவனிப்போம்,

கிழவன் சேதுபதியவாகளின முழுப பெயர் விசய ரகுநாதத் தேவர்எனபதாகும. அவர் இராமநாதபுரத்தில் செங்கோல் நடத்தி வருஙகாலத்தில், கீழக்கரையில் பெருமபுகழுடன வாழந் திருந்த சீதக்காதிவளளலாரோடு மிகுந்த நட்புக் கொள்ளவே, ஒருவரையொருவர் நன்கு மதித்துவந்தனரெனப்தும், முக்கியக காரியஙகளில், நெருக்கடியான நேரஙகளில, ஒருவரது உதவி மற்றவர்க்குத தேவையாயிருந்தது எனபதும நனகு அறியப படுகினறன.

கிழவனசேதுபதி யெனபபடும் விசயரகுநாதத தேவர் போரில் மறந்தும புறஙகொடா மனனராய விளஙகியவர். ருஸதமகான எனனும முஸலிமதலைவரிடம் அடிமைபபட்டி ருந்த மதுரைமன்னர் சொக்கநாத நாயககரை விடுவித்தவர் இச் சேதுபதியே. மகத்தான இச சேவையைப பாராட்டி, சொக்கநாத நாயக்கர் சேதுபதிககுப 'பரராஜ கேசரி' எனற பட்டத்தை அளித்தார்.

சேதுபதி தன மைத்துனர் இரகுநாதரைப புதுக் கோட் டைக்குத தலைவராக்கி 'இரகுநாதத் தொண்டைமான', என னும பட்டத்தையும அளிததார். சேதுபதிவிசயரகுநாதத தேவர் 1792-ஆம ஆண்டில் மதுரையுடன கொண்ட தொடர் பை அறுத்துககொண்டு, சுயேச்சையாக ஆளத தொடஙகினர். தம நிலைமையைப பலபபடுத்திக் கொளவதறகாக, இராமநாத புரக் கோட்டையைக் கட்டினா. அது கல்லால் கட்டபபட்டது. கோட்டைச்சுவர் இருபத்தேழு அடி உயரமும ஐநதடி அகல மும் உள்ளது; நீண்ட அகழியால் வளைககபபெறறிருநதது. கோட்டையின நடுவில அரண்மனை அமைககப்பட்டது. இராம லிங்கவிலாசம் எனற பெரிய கூடத்தில், சேதுபதி போரில் செய்த வீரச்செயல் முதலானவறறைத் தீட்டியுளளார். இவற்றை யெல்லாம் செய்துமுடிக்க ஏராளமான பொருள தேவையாயிருந்தது. அவவமயம வளளலார், நண்பர்சேது பதிக்கு வேணடிய பொனனும் பொருளும கொடுத்து உதவி னர். இதறகாக இராமநாதபுரம மூலைககொததளததில் நாட்டபபட்டிருந்த கல் ஒனறில் 'சீதக்காதி' எனறு பொறிக கபபட்டிருந்தது.

மேலும், கிழவன்சேதுபதிக்குச் சீதக்காதி மரக்காயர் அறிவுரை பகர்வதில் மந்திரி போன்றும் இருந்தார். சீதக்காதியோ மரக்கல மன்னர்; பொன்படைத்த புண்ணியவான்; கொடையிற் சிறந்த கண்ணியவான். இவரது புகழையும் மேம்பாட்டையும் அறியாதார் இலர். இவர் அக்காலத்தில் புனிதப் பெரியாராயிருந்த ஸதக்கத்துல்லா வலிஅவர்களின் நெருங்கிய நண்பர். வலிஅவர்கள்மூலமாக, முகலாயப் பேரரசர் அவ்ரங்குசேபு அவர்களுக்கும் அறிமுகமானவர். ஆகலின், சீதக்காதிவள்ளலுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த வள்ளலின் நட்பைச் சேதுபதி பெற்று, முகலாயப் பேரரசரிடத்தும், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடத்தும் தொடர்புகொள்ள, வள்ளலாரை அரசாங்கத்தூதுவராக வைத்துக் கொண்டார். வள்ளலாரின் சீரிய குணம், சிறந்த செல்வாக்கு, ஒப்பற்ற கொடை ஆகியவற்றை உணர்ந்த சேதுபதி, சீதக்காதிக்கு 'விசயரகுநாதப் பெரியதம்பி' என்ற பிரியமான உரிமையைக் குறிக்கும் பெயரைச் சூட்டினுரென்ருல், நம் வள்ளலின் மேன்மையைச் சொல்லவும் முடியுமா!

சேதுபதி – சீதக்காதி இவர்கள் நட்பைக்கவனிக்கும் போது ஒரு செய்தி நன்கு புலனுகின்றது. திருநெல்வேலியில் உள்ள காயல்பட்டினத்தில் பிறந்த ஒருவர் சேதுமன்னரோடு தொடர்பு கொண்டு வாழ்ந்தார் என்றுரைப்பதைவிட, சேது நாட்டிலிருக்கும் கீழக்கரையில் பிறந்து வாழ்ந்த ஒரு குடும்பத் தலைவர் அம் மன்னரிடம்அன்பு பூண்டு வாழ்ந்தார் என்று உரைப்பது எளிதாகும். சேதுபதியவர்களிடம் பரிசு பெற்ற புலவர், பலர் வள்ளலாரைக் காண்பதற்குக் கீழக்கரைக்கு வந்து போன வரலாறுகள் இருப்பதனுல், வள்ளலார் பிறந்து வாழ்ந்த நகரம் கீழக்கரை என்றே துணியலாம்.

கிழவன்சேதுபதியை வள்ளலாருடைய விளையாட்டுத் தோழ ரென்பர். சேதுபதி வம்சம் சந்ததியற்றுப் போகவே, கிழவன்சேதுபதி இராமநாதபுரம் சமஸ்தானத்துக்குச் சுவீகாரப்புதல்வராகச் சென்ருர். அச்சமயம், கிழவன் சேதுபதி தம் விளையாட்டுத்தோழர் சீதக்காதியையும் அழைத்துச் சென்ருர். என்றும், அங்கு முஸ்லிம் குடிகள் இல்லாமையால்

அருகில் இருந்த கீழக்கரையில் வாழும்படி செய்தாரென்றும் கன்னபரம் பரைச்செய்தி ஒன்று சொல்லப்படுகிறது. அது சேதுபதிகள்வமிசத்தில் பிற்காலநிகழ்ச்சி யொன்றைக் குறிப்பதாகக் கொள்வதே பொருந்தும்.

சுவீகாரமாகச் சென்றவர் கிழவன்சேதுபதி காலத்திலிருந்து நூற்றிருபத்தைந்து ஆண்டுகளுக்குப்பின், புது மடத்திற் பிறந்த முத்து ராமலிங்க சேதுபதியாவார். அவர் சிறு வயதினராகையால், அவர்தமையனுர் பொன்னுச்சாமித் தேவரென்பவர் சம்ஸ்தானத்தைச் சீராக நடத்த, தம் விளையாட்டுத் தோழராயிருந்தவரும், புதுமடத்திற் கடுத்துள்ள கும்பரமென்ற சிற்றூரில் பிறந்தவருமாகிய லப்பைக்கனிஅம்பலகாரரை அழைத்துச் சென்றுர். லப்பைக்கனிஅம்பலகாரரின் தந்தைக்கு மனைவியர் இருவர்; அவர்களுள் ஒருவர் கீழக்கரையில் பிறந்தவர்; மற்ருெருவர் கும்பரத்தில் பிறந்தவர். இவ்விரு மனைவியர்க்கும் ஆண்மக்கள் இருந்தனர். பொன்னுச்சாமித் தேவர் கும்பரத்து மனைவியின் புதல்வரான லப்பைக்கனி என்பவருக்கு அம்பலம் என்ற பட்டத்தைச் சூட்டி அவரைக் கீழக்கரைக்கு அம்பலகாரராக நியமித்தார்.

ஆகவே, சீதக்காதிவள்ளல் கிழவன்சேதுபதிக்கு விளையாட்டுத் தோழராயிருந்து, இடம்பெயர்ந்து இராமநாதபுரம் வந்தவர் என்பதும், இராமநாதபுரத்தில் முஸ்லிம்கள் இல்லாமையால் கீழக்கரையில் அமர்த்தப்பட்டார் என்பதும் பொருத்தமில்லாத கதையென்றே தெரிகிறது. ஏனெனில், இராமநாதபுரத்தில் தொன்றுதொட்டு முஸ்லிம்மக்கள் அதிகமாக இருந்து வந்திருக்கிருர்கள். அங்கு, அநேக வலிமார்கள் அடங்கியிருப்பதனுல், அந் நகரத்திற்கு வலிமார் நகரம் என்ற பெயரும் வழங்கிவந்துளது.

சீதக்காதியும் கும்பெனியாரும்

பதினைந்தாம் நூற்ருண்டின் இறுதியில், வாஸ்கோ ட காமா கடல்வழியாக இந்தியாவுக்கு வழி கண்டுபிடித்த காலத்திலிருந்து, ஐரோப்பாவுக்கும், இந்தியாவுக்கும் முதன் முதலாகத் தொடர்பு ஏற்பட்டது. ஐரோப்பிய வணிகர்கள்பலர் இந்தியா

வுக்கு வரத்தொடங்கினர். முதலில் போர்த்துகேயர் இந்தியாவின் மேற்குக் கரையில் பண்டசாலைகளை ஏற்படுத்தி, வியாபாரத்தைப் பெருக்கிவந்தனர். தென்னிந்தியாவிலிருந்தும் இலங்கை முதலிய கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்தும் கிடைக்கக் கூடிய பொருள்களை மேல் நாட்டிற்கு ஏற்றுமதி செய்து பெரும் பொருள் ஈட்டி வந்தனர். அவர்களைப் பார்த்து டச்சுக்காரரும் பிரஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் நாளடைவில் இந்தியாவோடும் கிழக்கிந்தியத் தீவுகளோடும் வாணிகம் செய்தற்குத் தத்தம் கும்பெனிகளை நிறுவ இந்தியாவுக்கு வந்தனர்.

ஆங்கிலேயர், கி. பி. 1639-ஆம் ஆண்டில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைச் சென்னைக் கடற்கரையோரமாக நிறுவினார்கள். அக் கோட்டையை ஒட்டியே சென்னப்பட்டினம் என்ற நகரும் பெருகி வந்தது. ஆங்கிலேயர் முதன்முதலில் வாணிகத் தொழிலைப் பெருக்குவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார்கள். சென்னையில் வணிகர் கௌன்சிலும், அதற்குத் தலைமையாகப் பிரசிடெண்ட் பதவியுடையவரும் வியாபாரக் காரியங்களைக் கவனித்துவந்தனர். அவர்கள் நம் நாட்டில் எங்கெங்கு வியாபாரப் பொருள்கள் கிடைக்கின்றன, அவற்றை யார்மூலம் விலைக்குவாங்கலாம் என்ற ஆராய்ச்சியிலேயே காலத்தைக் கழித்துவந்தார்கள்,

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், இராமநாதபுர எல்லையில் வணிகமன்னராக வீற்றிருந்த சீதக்காதி வள்ளலாருடன் கும்பெனியார் அடுத்துப் பழகவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கி. பி. 1686, 1687, 1690, ஆகிய ஆண்டுகளில், வள்ளலாருக்கும் கும்பெனியாருக்கும் கடிதப் போக்குவரத்து இருந்ததாகத் தெரிகிறது.

கி. பி. 1686-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாம் தேதி சீதக்காதி மரக்காயர் கும்பெனியின் பிரசிடெண்டாக இருந்த வில்லியம் கைபோர்ட் (William Gyfford Esqr. President and Governor) என்பவருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில், ஒவ்வொரு வருடமும் கும்பெனியாருக்கு எவ்வளவு மிளகு தேவையாயிருந்தாலும் தம்மால் கொடுக்கமுடியுமென்றும், அச் சரக்கைக் கிழக்கரையில் கொடுத்தால் கண்டி ஒன்றுக்குப் பதி

னைந்து வராகன் கொடுக்கவேண்டுமென்றும் எழுதியுள்ளார். அக் கடிதத்தைப் பிரசிடெண்ட் கௌன்சில் கூட்டத்தில் வைத்துப் படித்து ஆலோசனை செய்து கீழ்க்கண்ட விதமாகப் பதில் எழுதத் தீர்மானித்தார். தேவையான மிளகைச் சென்னையில் கொடுத்தால் கண்டி ஒன்றுக்குப் பதினைந்து வராகன் கொடுக்கப்படு மென்றும், கீழக்கரையில் ஒப்புக் கொடுத்தால் பன்னிரண்டு வராகன் கொடுக்கப்படு மென்றும், இதற்கு இணங்கினால், அது சம்பந்தமாகப் பேசி முடிவு செய்யத் தகுதியுள்ள மனிதரை அனுப்புவதாகவும் எழுதப் பட்டிருந்தது. அப்பிரதிநிதி, மரக்காயரின் ஆட்சியின்கீழ் வியா பாரம் செய்யவும், பண்டசாலை திறக்கவும், சில உரிமைகளைப் பெறக் கவுல்வாங்கவும் ஆலோசனை செய்து, மரக்காயர் சொல் லுகிற மறுமொழியிலிருந்து வியாபாரசம்பந்தமான மற்ற விஷயங்களையும் பேசுவார் என்றும் எழுதப்பட்டிருந்தது.

ஒரு வாரம் கழிந்த பின், டிசம்பர் மாதம் ஒன்பதாம் தேதி கௌன்சில் கூடிய போது பல விஷயங்களை ஆலோசித்தபின், ஸ்லூப் ஜேம்ஸ் (Sloop James) என்ற கப்பலைப்பற்றிப் பேசும் போது, அக்கப்பல் தூத்தக்கரைக்கு (தூத்துக்குடி) அண்மை யில் உள்ள கீழக்கரைக்குப் போக வேண்டியது. அங்குக் கப் பலைப் பழுது பார்ப்பதற்குப் பலவிதத்திலும் வசதிகள் இருப் பதனால், அவ் வேலையைக் கவனிக்க வேண்டியது என்றும், கிழக்குக் கரையில் வேறு துறைமுகங்களில் அரிசி கிடைப்பது அரிதாயிருப்பதனாலும் சென்னையில் உள்ள கும்பெனியாருக்கு அதிக அரிசி தேவையாயிருப்பதனாலும், கீழக்கரையிலிருந்து அரிசி ஏற்றுமதி செய்ய வேண்டியது என்றும் முடிவுசெய் தார்கள்.

இவ் விரண்டு கடிதங்களிலிருந்து, அக்காலத்தில் கீழக் கரை முக்கியத்துறைமுகமாக இருந்ததென்பதும், அதன் செல் வாக்கும் பெருமையும் சீதக்காதிமரக்காயர்மூலமாகப் பெருகி இருந்தன வென்பதும் நன்கு விளங்குகின்றன. கும்பெனியா ருக்கு வருடந்தோறும் எவ்வளவு மிளகு தேவையாயினும் நிரப்பமாகத் தம்மால் கொடுக்க முடியுமென்று வள்ளலார் எழுதியிருப்பதனால், அக்காலத்தில் தென்னாட்டு மிளகு

வியாபாரம்முழுவதும், அவர்மூலமாகவே நடந்து வந்தது என்று ஊகிக்கலாம். இந்தியாவின் மேற்குக் கரையில்—முக்கியமாக மலையாள நாட்டில்—விளையக்கூடிய மிளகும், கிழக்கிந்தியத்தீவுகளில் விளையக் கூடிய மிளகும், கீழக்கரை வணிகர் சீதக்காதிமரக்காயர்மூலமாகவே செலவாகியிருக்கிறது என்று தெரிகிறது. அவருடைய வாணிகப் பெருமையும் செல்வாக்கும் எங்கும் பரவியிருந்ததனால், புதிதாகவந்த ஆங்கிலக் கம்பெனியார் கீழக்கரையில் மரக்காயர்தாம் அரசு புரிகிறாரென்று கருதி, கடிதத்தில் ' அவர் கவர்ன்மெண்ட் ' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால் வள்ளலாரின் வானளாவிய புகழை நாம் நன்கு அறியலாகும்.

1686-ஆம் ஆண்டில் ஏற்கனவே பிப்ரவரி மாதம் மூன்றாம் தேதி, சீதக்காதி மரக்காயர் கும்பெனியாருக்கு ஒரு கடிதம் எழுதி யிருக்கிறாரென்று தெரிகிறது. அடுத்த மார்ச் மாதம் எட்டாம் தேதி கூடிய கௌன்சிலின் சம்மதம் பெற்று பிரசிடெண்டு, சீதக்காதி மரக்காயருக்குக் கடிதம் ஒன்று அனுப்பியிருக்கிறார். அக்கடிதமே, பிப்ரவரிமாதம் மரக்காயர் எழுதிய கடிதத்திற்குப் பதிலாக இருக்குமென்று ஊகிக்கலாம். அக் கடிதங்களில் அடங்கிய பொருள்களைத் தெரிந்துகொள்ள எவ்வளவோ முயன்றும் அவை கிடைக்காததனால் விவரம் எழுத முடியவில்லை.

கி. பி. 1687-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதின்மூன்றாம் நாளில், பிரசிடெண்ட் வில்லியம் கைபோர்ட் கௌன்சில் கூட்டம் நடத்திய போது, ஸ்லூப் ஜேம்ஸ் என்ற கப்பல் தூத்துக்குடிக் கடுத்துள்ள கீழக்கரைக்குப் போகவேண்டுமென்று முன்னரே பிறப்பித்திருந்த உத்திரவை யொட்டி, கீழ்க்கண்டவாறு கட்டளை இடப்பட்டது.

' அக் கப்பல் திரிகோணமலைக்குச் சென்று அங்குச் சில அலுவல்களைக் கவனித்துக் கொண்டு கீழக்கரைக்குப் போக வேண்டியது. அதில் எம். வில்லியம் கௌலி (M. William Cawely) பிரயாணம் செய்து, சீதக்காதிமரக்காயரோடு மிளகு வியாபார சம்பந்தமாகப் பேச வேண்டியது, ஸ்லூப் ஜேம்ஸ்

கிழக்கரையில் செப்பனிடப்பட்டபிறகு அரிசி ஏற்றுமதி செய்ய வேண்டியது.'

ஆனால், இதற்கிடையில் கிழக்கரையில் அரிசியும் நெல்லும் கிடைக்கவில்லையென்று செய்தி வந்ததனால், அதே ஜனவரி மாதம் பதினேழாந்தேதி கூடிய கௌன்சிலில் ஸ்லூப்ஜேம்ஸ் என்ற கப்பலை வங்காளத்துக்கு அனுப்ப வேண்டும் என்று மாற்றி உத்தரவு அனுப்பபட்டது.

1690-ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முப்பதாம் நாள் வியாழக்கிழமை கௌன்சில் கூடியபோது பிரசிடெண்ட் எலிஹூ ஏல் (Elihu Yale Esq. President and Governor) இராமநாதப்ரத்தில் அரசாண்டுவந்த விசயரகுநாதத்தேவர் எழுதிய கடிதத்தைப் படித்தார். அதில், கும்பெனியார் தம்முடைய நாட்டில் வியாபாரத் தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டுமென்றும், அது சம்பந்தமாகப் பண்டசாலை ஒன்று நிறுவ வேண்டுமென்றும் கண்டிருந்தது. மேலும், தேவர் அடிக்கடி தமக்குக் கடிதம் எழுதிவருவதாகவும், அவை சம்பந்தமாகத் தாம் எழுதிய கடிதம் ஒன்றிற்குத் தேவரிடமிருந்து பதில் கடிதம் வந்ததாகவும் தெரிவித்தார். இன்னொரு கடிதத்தில், தேவர் சிலோனைச் சேர்ந்த கண்டி அரசனிடம் கைதிகளாக இருக்கிற ஆங்கிலேயர்களை விடுவிக்க முயற்சி செய்து வருவதாகவும், அம் முயற்சி வெற்றிபெறத் தேவர் சொந்தச் செலவில் கண்டிஅரசனுக்கு வரிசைகள் அனுப்பியிருப்பதாகவும், தம் முயற்சியின் பலனாக விரைவில் கைதிகள் விடுவிக்கப்படுவார்களென்ற தைரியம் தமக்கு இருப்பதாகவும், இதற்குப்பதிலாக, சீதக்காதி மரக்காயருக்குச் சென்னையில் வியாபாரம் செய்யவும் ஆங்கிலேயர்இடம் வசூல் செய்யும் தீர்வையைப் போலவே மரக்காயரிடமும் தீர்வையை வசூல் செய்யவேண்டுமென்றும் கேட்டிருந்தார். இவற்றையெல்லாம் ஆராய்ந்த கௌன்சில், தேவர் கேட்கிறபடி மரக்காயர் சென்னையில் வியாபாரம் செய்வதற்கும் ஆங்கிலேயர் இடம் வாங்குகிற தீர்வையைப் போலவே மரக்காயரிடமும் தீர்வையை வசூலிப்பதற்கும் தீர்மானித்தது.

இக் கடிதத்தினால், சீதக்காதிமரக்காயர்வியாபார சம்பந்தமாக விசயரகுநாதத் தேவர் எடுத்துக்கொண்ட முயற்சி நன்கு

தெரிவதுடன, மரக்காயருமம தேவரும் நெருஙகிய நண்பர்க ளெனபதும புலனுகினறது.

மேலே கூறபபட்ட கடிதங்களிலெல்லாம, சீதக்காதிவளள லைப் 'பெரியதமபிமெரக்கான' என றும, தேவரை, 'பிரினஸ தேவரா' என றும விவரிககபபட்டிருக்கிறது. இபபெயர்கள, சீதககாதி வள்ளலாரையும கிழவனசேதுபதி என்று விளங்கிய விசயரகுநாதத் தேவரையும குறிககினறன என்பதில் ஐய மில்லை.

இஙஙனமிருகக, 1917-ஆம ஆணடில செபடமபர் மாதம வெளியான இந்தியன ஆணடிகுவரி (Indian Antiquary) எனற பிரதியில, கிழவனசேதுபதிகாலததிறகுப பின ஆணட முத்து விசயரகுநாதசேதுபதிகாலத்தில், அவர் இராமலிங்க விலாசம கட்டிய போது, அதறகு வளளலார் பொனனும பொருளும் கொடுதது உதவினுரென்று கூறியிருபபது தவறு எனறு தெரிகிறது.

வள்ளலாரும் ஸதக்கத்துல்லாவலியும்

சீதக்காதிவளளலார்காலததில் இருந்தவர்களுள், பேரறிஞ ராகவும் எல்லோராலும போறறபபட்டவராகவும விளங்கிய ஸதககத்துலலா வலியும் ஒருவராவர். அவா அக்காலத்தில் ஒரு வலியுல்லாவாகப புகழ பெற்று விளங்கினுர். அவா தகபபனுர் காயறபட்டினத்தில வாழ்ந்த முகமமது ஸுலைமான் லபபை வலியுல்லா எனபவா.

முகமமது ஸுலைமான் லப்பை வலியவர்களும, கீழக்கரை யில் அனைவராலும் புகழபபட்ட வேதஅறிஞர் ஷைகு அப்துல் காதிறு எனற திருப்பெயருடைய மகதூம சின்னயினு லப்பை ஆலிம அவர்களும காயலபட்டினத்தில் ஷமசுத்தீன வலியுல்லா அவர்களிடம கல்வி கறற ஒரே பளளி மாணவர்களாவர்கள. அவர்கள ஒரேவயதுடையவர்களாயும சிறந்த நணபர்களாயும் விளஙகினுர்கள. மகதூம சினனயினு லப்பை ஆலிம அவர்கள புலமை முதிர்ந்து கீழக்கரைககு வந்த போது, வளளலாரின குடுமபத்தார் அவரை அனபுடன வரவேற்றுர்கள; தம அரண



கீழக்கரையில்

மக்தூம் சின்னயினு லப்பை ஆலிம் அவர்களின் கல்லறை

மனைக்குத் தெற்கே ஒரு மத்றஸா (பாடசாலை) கட்டிக் கொடுத்து, மார்க்கக் கல்வியைக் கற்பிக்க உஸ்தாதாக (ஆசிரியராக) அமர்த்தினர்கள். அங்கு அவரிடம் பாடம் கேட்பதற்குத் தமிழ்நாட்டின் எல்லாப் பாகங்களிலிருந்தும் பல மாணுக்கர்கள் வருவது வழக்கமாய் இருந்தது. அவ்வாறு கற்றுப் பண்டிதரானவர் பலர். அதனால், அவர்பெயரும் புகழும் நாடெங்கும் பரவியிருந்தது. அத்தகைய பெரியார் ஹிஜ்றி 1070-ஆம் ஆண்டு றபீஃ-அல்-ஆகிர் மாதம் ஐந்தாம் நாளில் (கி. பி. 1659) வபாத்தானர்; கீழக்கரையில் பழைய குத்பாப் பள்ளியில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

காயல்பட்டினத்தில் திரு அவதாரம் செய்த ஸதக்கத்துல்லாவலி அவர்கள் இளமைப்பருவத்தில் தம் தந்தையாரிடம் கல்வி கற்ருர். பிறகு மக்தூம் சின்னயினுப்பெரியார் அவர்களின் மத்றஸாவில் கல்வி கற்கக் கீழக்கரைக்கு வந்தார். மக்தூம் சின்னயினு அவர்கள் தம் நண்பரின் புதல்வரை அன்புடன் வரவேற்றுக் கல்வி கற்பித்துவந்தார். நாளடைவில் தர்மநூல், நியாயசாஸ்திரம் முதலியவற்றைக் கற்றுத்தெளிந்தார். சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்றதற்கு அடையாளமாக வித்தியாபட்டம் அளிக்கப்பட்டது. அக்காலத்தில், ஆசிரியர் கையாலேயே தலைப்பாகையும் சட்டையும் அணிந்து வித்தியா பட்டம் கொடுப்பது வழக்கமாயிருந்தது. அவ்வாறு, மக்தூம் சின்னயினு அவர்களும் தம் திருக்கையால் ஸதக்கத்துல்லா வலி அவர்களுக்குத் தலைப்பாகை கட்டி, சட்டை அணிவித்தார். இவ்விவரம், தம் ஆசிரியர் மக்தூம் சின்னயினு அவர்கள் இறந்தபோது, ஸதக்கத்துல்லாவலி அவர்கள் அறபு மொழியில் எழுதிய சரமகவியில் நன்கு அறியலாகும்.

ஆசிரியர் இறந்தபின் வலிஅவர்கள் அவர்ஆசனத்தில் அமர்ந்து மாணுக்கர்களுக்கு மார்க்கக்கல்வி கற்பித்து வந்தார். அவ்வாறு சில ஆண்டுகள் சென்ற பிறகு தம் சொந்த ஊராகிய காயல்பட்டினத்திற்குச் சென்ருர். அங்குச் சில ஆண்டுகள் தங்கி, பிறருக்கு மார்க்கக்கல்வியைக் கற்றுக்கொடுத்தும் காஜியாகவும் (ஜும்) இருந்தார். பின், மேலப்பாளையத்திற்குச் சென்று சில வருடங்கள் காஜியாகவும் இருந்தார். இறுதியில், கீழக்

கரைக்கு வந்து, இப்பொழுது மேற்குத் தெருவில் உள்ள அப்பாஅவர்கள்கூடம் என்னும் இடத்தில் வாழ்ந்திருந்து மார்க்கக் கல்வியைப் பரவச்செய்து வந்தார்.

அப் பெரியார் தம் எழுபத்துமூன்றும் வயதில் ஹிஜ்றி 1115–ஆம் ஆண்டு ஸபர் மாதம் ஐந்தாம் நாள் (கி. பி. 1703) வபாத்தானுர். அவர் கீழக்கரையில் பெரிய குத்பாப்பள்ளியில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிருர்.

ஸதக்கத்துல்லா வலி அவர்கள் அறபு மொழியில் ஆழ்ந்த புலமை வாய்ந்தவர். மார்க்கப்பற்று மிகுதியும் பெற்ற புனிதர். மாசற்ற வாழ்க்கை நடத்திய மேன்மையாளர். அவர் புகழ் இன்றும் கீழக்கரை காயல்பட்டினம் மேலப்பாளையம் ஆகிய இடங்களிலும், தமிழ்நாட்டின் மற்றப் பகுதிகளிலும் நின்று நிலவுகிறது. ஏனெனில், ஸதக்கத்துல்லாவலி அவர்களின் காலத்தில்தான், தமிழ்நாட்டில் முன்னிருந்ததை விட இஸ்லாமிய வளர்ச்சியில் அதிகமான புத்தொளியும் பேருணர்ச்சியும் எழுந்தன. அவர் இஸ்லாத்தின் தொண்டில் மக்களை ஈடுபடுமாறு பேரார்வத்தைக் கிளப்பினுர். அப் புத்துணர்ச்சியால் மக்களனைவரும் தம் உடல் பொருள் ஆவி மூன்றனையும் அல்லாஹுக்காகத் தியாகம் செய்ய எள்ளளவும் பின்வாங்கவில்லை. அறபுமொழியில் கரைகண்ட ஸதக்கத்துல்லாவலிஅவர்கள் அம் மொழியில் பல நூல்கள் இயற்றியுள்ளார். அவற்றுள், வித்ரியா (وترية) என்ற நூல் தமிழ்நாடு, வட இந்தியா, அறபுநாடு ஆகிய இடங்களில் உள்ள மக்களால் புகழப்பட்டு உச்சிமேல் வைத்துப் போற்றப்படும் நூலாக விளங்குகிறது.

ஸதக்கத்துல்லாவலிஅவர்களின் அருள் நிறைந்த அறிவும், மருளற்ற மார்க்க பக்தியும், போற்றத்தக்க புனித வாழ்க்கையும் அவரது புகழை எட்டுத்திசையிலும் பரப்பின. அவரது ஒப்பற்ற மேன்மை, முகலாயப் பேரரசர் அவ்ரங்குசேபு ஆலம்கிர் பாத்ஷாவுக்கும் எட்டியது. அவருடைய பேராற்றல்களையறிந்து பெரிதும் வியந்த பேரரசர் அவரைத் தமது தலைநகராகிய டில்லிக்கு அழைத்தார்; தென்னிந்தியாவுக்கு அவரைக் கலீபாவாக நியமிப்பதாகவும் வாக்களித்தார். எக்காரணம்

பற்றியோ வலிஅவர்கள் இவ் விரண்டு வேண்டுகோளுக்கும் இணங்கவில்லை. அருள்வாழ்க்கை நடத்திய அறிஞருக்கு—தமக்கென வாழாத் தன்மையாளருக்கு-பிறர்நலமே நாடும் பெருமானுக்கு—பட்டம் பதவிகளில் சிறிதும் பிரியமில்லை போலும்! பேரரசர் அவ்ரங்குசேபு இப் பெரியாரின் மறுப்புக்குப் பெரிதும் வருந்தினர் என்று சொல்லப்படுகிறது. அவ்ரங்குசேபு பாத்ஷாஹ் அவர்களுக்கு வலிஅவர்கள் எழுதிய கடிதமொன்றில், வள்ளலாரின் மரக்கல மாண்புபற்றியும், அரசியல் அறிவு பற்றியும், வரையாது வழங்கும் வள்ளன்மை பற்றியும், குறுநிலமன்னரும் அவரது நட்பை நயந்து நாடும் நலம்பற்றியும் குறிப்பிட்டிருந்தார். இஸ்லாத்தின்பாற் கொண்ட பக்தியில் தனிச்சிறப்பு வாய்ந்த அவ்ரங்குசேபு பாத்ஷாஹ் பெரிதும் மகிழ்ந்து, வள்ளல் சீதக்காதியை வங்காளத்திற்குக் கலீபாவாக நியமித்தார். வள்ளல் அப்பதவியைப் பெற்றது தமிழ் முஸ்லிம்கள் மிகவும் பெருமைப்படத் தக்கதாகும். அத்தகைய பதவி அதற்கு முன் தமிழ்முஸ்லிம்களுக்குக் கொடுக்கப்பட்டதில்லை. முகலாயப் பேரரசர் அளித்த பதவியை வள்ளல் ஏற்றதனுல், அப்பதவி பெருமை பெற்றது என்னலாம். தமிழ் நாட்டின் மீதுள்ள அளவற்ற பற்றினுல் வள்ளலார் வங்காளம் செல்லத் தயங்கினுரேனும், அருளாளர் ஸதக்கத்துல்லாவின் கட்டளையை மறுக்க அஞ்சித் தமிழ்நாட்டைப் பிரிய முடியாமல் பிரிந்து வங்காளம் சென்று கலீபா பதவியை ஏற்றுக் கொண்டார்.

வங்காளத்தின் தலைமைப் பதவியை ஏற்ற வள்ளலார், சிறிது காலம் அங்குத் தங்கியிருந்தார். அங்நாட்டின் தட்ப வெப்ப நிலை தமிழ்நாட்டினின்றும் முற்றிலும் வேறுபட்டிருந்ததனுலும், அங்நாட்டின் அரசியல்நிலை வள்ளலாரின் மனத்திற்கு ஏற்ப இல்லாமையாலும், புத்தம் புதிய நாட்டில் புதுமுகங்களுக்கிடையே பொறுப்பு மிக்க பதவியை வெறுப்புக்கிட மின்றி வகிப்பது சிரமமாகையாலும், அங்கிருந்து தம் அருமைத் தாய் நாட்டிற்கு வந்து சேர்ந்தார். இச் செயல் முகலாயப் பேரரசருக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்திருக்கும் என்பதிற் சந்தேகமேயில்லை. தாய்நாடு திரும்பிய வள்ளல் சீதக்காதி, அவ்ரங்குசேபு பாத்ஷாஹ்வைப் பெருமைப்படுத்தும் முகமாக,

சுண்டைக்காய்ப் பருமனுள்ள முத்துக்களாலான தஸ்பீஹ்மணி (ஜபமாலை) ஒன்றை பாத்ஷா அவர்களுக்கு அனுப்பினர். ஆண்டவன்தொழுகையில் ஆர்வமிக்க அவ்ரங்குசேபுபேரரசருக்கு இம் மேலான பரிசு மட்டில்லா மகிழ்ச்சியை அளித்தது. அதற்கு நன்றியாக டில்லிமன்னரும் கீழக்கரை வள்ளலுக்குச் சந்தனம், தேயிலை, எழுதும் மை முதலியவற்றைப் பரிசாக வழங்கினர் என்ற கன்னபரம்பரைச் செய்தி மக்களிடையே பரவியிருக்கிறது. இதுஎவ்வளவு உண்மையென்று துணிந்து கூற எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை.

பொருளாளர் சீதக்காதிக்கும் அருளாளர் ஸதக்கத்துல்லாவுக்கும நெருங்கிய நட்பு இருந்தது. இவ்வாறு பொருளுக்கும் அருளுக்கும் ஏற்பட்ட நட்பு, மார்க்கத்திற்கு ஆக்கமளித்தது. நபிகள் நாயக மாண்மியத்தை உமறுப்புலவர் சீருப்புராணவாயிலாக உலகிற்கு உதவ இவ் விருவரது முயற்சியே காரணமாயிருந்தது.

வலி அவர்கள் சீதக்காதிவள்ளலுக்குத் தலை சிறந்த தோழராகவும் மதகுருவாகவும் இருந்துவந்தார். நொண்டி நாடகத்தில் கதாபாத்திரனைநொண்டி சீதக்காதியின் முன்னிலையிற் சென்று வணங்கிநின்று கஷ்டங்களை எடுத்துக் கூறினன். அவனை அன்புடன் உபசரித்து இஸ்லாம் மார்க்கத்தில் சேர்க்க ஏற்பாடான போது வலி அவர்களைக்கொண்டே கலிமா சொல்லிக் கொடுக்கப்பட்டது.

இத்தகைய அருங்குணங்கள் படைத்த ஸதக்கத்துல்லா வலி அவர்கள் முஸ்லிம் பெரியார்களுள் தலைசிறந்து விளங்கினர் என்பதில் வியப்பொன்றுமில்லை. பொன்னும், பொருளும் கொடுத்துப் புகழ் பெற்றார் சீதக்காதி; அன்பும் அருளும் அளித்து இசை நாட்டினர் ஸதக்கத்துல்லா. இவ்விருவரிடை இருந்த தொடர்பு இஸ்லாமிய உலகுக்கே பெருமையை அளித்தது.

. இவ்வாறு பொருளுக்கும் அருளுக்கும் ஏற்பட்ட நட்பு ஏதோ ஒரு காரணத்தால் பழுதுபட்டதென்று ஒரு வதந்தி உலாவிக் கொண்டிருக்கிறது. அது வருமாறு:

எக்காரணத்தினுலோ, ஞானி ஸதக்கத்துல்லாவும் வள்ளல் சீதக்காதியும் மனம் வேறுபட்டனர். வலிஅவர்கள் கீழக்கரையில் இருக்கப் பிரியமில்லாமல் வெளியேறினர். இவ் விரு பெருமக்களிடையே ஏற்பட்ட இப்பிரிவு இஸ்லாத்தின் நன்மையை விரும்பியவர்களுக்குப் பெருந்துயர் கொடுத்தது. பொருட்செல்வர் சீதக்காதி; அருட்செல்வர் ஸதக்கதுல்லா. இவர்களை அடுத்திருந்தவர்களுக்கு அளவற்ற துக்கம் உண்டாயிற்று. முக்கியமாக, வள்ளல் சீதக்காதியின் தாயாருக்கு இப்பிரிவு சகிக்கக்கூடியதாயில்லை. இஸ்லாத்தின் இருகண்களென விளங்கும் இவ் விருவருக்கும் திடீரென்று தோன்றிய மனவேறுபாட்டை நீக்குதல் தமது கடமை என உணர்ந்து, அப்பெருமாட்டி பல்லக்கிலேறிச் சென்று, தனக்குச் சொந்தமான கீழக்கரைக்கு அருகில் உள்ள உம்மாதோப்பில் தங்கியிருந்த வலிஅவர்களைச் சந்தித்தார். வலி அவர்களுக்குப் பலவித சமாதானங்களைக் கூறி மீண்டும் வருமாறு பெரிதும் பணிந்து வேண்டினர். ஆனால், வலி அவர்கள் பேராலோசனை புரிந்து செய்த முடிவை மாற்றிக் கொள்ள இசையவில்லை; கீழக்கரைக்கு மீண்டும் வருவதில்லை என்று கூறிவிட்டார். இவ்வாறு, வள்ளல் சீதக்காதியாருக்கும் புனிதர்ஸதக்கத்துல்லாவுக்கும் பல ஆண்டுகளாக நீடித்து வந்த நட்பு பலரைத் துயர்க்கடலுள் ஆழ்த்தும் அளவுக்கு முறிந்தது.

இதைப்பற்றி மற்ஞெரு செய்தி வழங்குகிறது. வலி அவர்கள் வள்ளலாரைச் சபித்தனர் என்றும், அதன்பயனுக் வள்ளல் சில நாளில் இராஜபிளவை என்னும் நோய்வாய்ப்பட்டு வபாத்தானுர் என்றும், பின்னர் வலிஅவர்கள் வபாத்தானுரென்றும் கூறுவர்.

மேற்கண்ட வகையில் வழங்குகிற கதைகளுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை. உண்மையில் வலிஅவர்களே முதலில் வபாத்தானுர். பின்னர் வள்ளலார் வபாத்தானுர். வலி அவர்கள் மௌத்தான போது, அவருடைய முக்கிய சீடர் பறங்கிப் பேட்டை மஹ்மூது தீபி என்பார் ஒரு சரமகவி பாடியிருக்கிறுர். அதில், வலிஅவர்களின் குணுதிசயங்களையும், அறிவின் பெருமையையும், கல்வியின் மாண்பையும் விரிவாக

எடுத்துக் கூறியிருப்பதுடன், அக்காலத்தில் வலி அவர்களின் நண்பரும் பேரும்புகழும் பெற்றவருமான ஷைகு அப்துல் காதிறு மரக்காயர் என்ற சீதக்காதி வள்ளலையும், கீழக்கரையில் பரம்பரை காஜிகள் குடும்பத்தில் பிறந்தவரும் அப்போது காஜியாக இருந்தவருமான ஷைகு அப்துல்லாஹ் காஜி அவர்களையும் குறிப்பிட்டு அவ் விருவருடைய சிறப்புக்களையும் எடுத்துக் கூறி அவை எந்நாளும் நிலைத்துநிற்க இறைவன் அருள் புரிவானாக என்றும் கூறியிருக்கிறார். இங்ஙனம் அறபு மொழியில் பாடப்பட்ட கையறுநிலையாகிய சரமக்வி வலி அவர்களது மறைவால் சீதக்காதியாருக்கு ஏற்பட்ட வருத்தத்தைப் போக்க அனுப்பப்பட்டது. புனிதர் ஸதக்கத்துல்லாவலி அவர்கள் அடங்கியிருக்கிற இடத்தில் இன்றுவரை இலங்குகிற வில் மச்சு மண்டபம் வள்ளலார் காலத்திலேயே கட்டப்பட்டது.

சரமகவியில், காஜி அவர்களையும் வள்ளலாரையும் குறிப்பிட்டிருப்பதனால் அவ்விருவரும் வலி அவர்களுக்கு உயிர்த் தோழர்கள் என்று தெரிவதுடன் அம் மூவருள் வலி அவர்களே முதலில் மௌத்தானாரென்பது நன்கு புலனாகின்றது.

வள்ளலாரின் தாயாருக்குச் சொந்தமான தோப்புக்கு உம்மா தோப்பு என்று பெயர் வழங்கிவருகிறது. அத்தோப்பு இன்றும் இருக்கிறது. அது கீழக்கரைக்கு வடமேற்கில் ஏறக்குறைய ஒரு மைல் தூரத்தில் காணப்படுகிறது. அதில் உற்பத்தியாகும் பனங்காய் மிகப்பருமனாயிருப்பதனால் வேறு தோப்பில் உற்பத்தியாகிற காய்களைப்பற்றிக் கூறும்போது உம்மா தோப்புக் காயுடன் ஒப்பிட்டுப்பேசுவது வழக்கமாயிருக்கிறது.

உம்மாதோப்பு என்பது 'உம்மு' என்ற அறபு பதத்துடன் தோப்பு என்ற தமிழ்ச்சொல் சேர்க்கப்பட்டுளது. உம்மு என்பதற்கு அறபியில் தாயார் என்பது பொருள். அத்தோப்பு வள்ளலாரின் தாயாருக்குச் சொந்தமானதனால் அப்பெயர் கொண்டு இன்றளவும் மக்களிடையே வழங்கிவருகிறது. அவ்வம்மையார் வாவாலி மரக்காயரின் செல்வப் புதல்வி; மவ்லா-சாஹிபு என்ற பெரியதம்பி மரக்காயரின் அன்பு மனைவி;

கிழக்கரையில் ஸதக்கதுல்லாஹ் வலி அவர்களின் கல்லறை

வள்ளலாரின் மாண்பு மிக்க மாதா. இவ்வாறிருக்க, சீதக்காதி காயற்பட்டினத்திற் பிறந்தாரென்று சொல்லுகின்றவர்களின் கூற்றைக் கவனித்தால், அச் சீமாட்டி காயற்பட்டினத்தில் வாழ்ந்திருக்க வேண்டுமன்றோ? ஆனால், அவ் வம்மையார் எக் காரணம் கொண்டும் அங்கு வாழ்ந்திருக்கவில்லை என்றே சொல்லவேண்டும். தாய் தந்தையர் கீழக்கரையில் இருந்திருப்பதனாலும், அவருக்குச் சொந்தமான எல்லாவிதச்சொத்துக்களும் கீழக்கரையிலேயே இருந்ததனாலும், சீதக்காதி வள்ளலை ஈன்றெடுக்க வேண்டிக் காயற்பட்டினத்துக்குச் சென்றிருப்பாரென்று சொல்ல இடமில்லை.

வள்ளலும் புலவர்களும்

நொண்டி நாடகத்தில் காணப்படுஞ் செய்திகளால், வள்ளல் சீதக்காதிஅவர்களின் அரண்மனையில், உமறுப்புலவர், கந்தசாமிப் புலவர், இன்னும் பல புலவர்களும் குழுமியிருந்தனர் என்று அறிகிறோம்.

உமறுப்புலவர் சீறுப்புராணத்தை இயற்றியவர். அதை இயற்றுவதற்கு ஸதக்கத்துல்லாவலிஅவர்களும் சீதக்காதி அவர்களும் காரணகர்த்தர்களாக இருந்தார்களென்றும், புலவருக்கு வலிஅவர்களே நபிநாயகம் அவர்களின் வரலாறுகளைப் போதித்தாரென்றும் கன்னபரம்பரைச் செய்தி ஒன்று தமிழ்முஸ்லிம்களுக்கிடையே வழங்கிவருகிறது. இச்செய்தியை விளக்க ஆதாரம் இல்லை யெனினும், புலவருக்கு வலிஅவர்களின்மேல் இருந்த பக்தி, விசுவாசம், நன்மதிப்பு ஆகியவை குருவென்று கொள்ளுமாறு தூண்டின என்பது சீறுப்புராணத்தின் கடவுள்வாழ்த்தி லடங்கிய பின் வரும் செய்யுளால் அறியக் கிடக்கின்றது.

"நம்மையா ளுடையான் வேத நபிதிரு வசனந் தீனோர்
சம்மதித் திடப்பா ரெல்லாந் தழைக்கவே விளக்கஞ் செய்தோர்
இம்மையு மறுமை யும்பே றிலங்கிய ஸதக்கத்துல்லா
செம்மல ரடியி ரண்டுஞ் சிந்தையி லிருத்தி னேனே.

சீறுப்புராணத்தில், சீதக்காதிவள்ளலாரைப் பற்றி எங்கும் குறிப்பிடாமையாலும், அபுல்காஸிம் என்பவரைக்குறித்திருப்

பதனுலும், இப்புராணம் பாடுமுன்பே வள்ளல் புகழுடம் பெய்தியிருப்பார் என்று கருதலாம். வள்ளலாரினும் புலவர் இளைஞர் என்பது தெரிகிறது. சீதக்காதிவள்ளல் உமறுப் புலவர்மீது மிக்க அன்பு பாராட்டி வந்தாரென்ற விவரம் தமது அரண்மனைக்கு மேற்கே குடியிருக்க வீடும் கொடுத்து, கலியாண மகிமையும் ஏற்படுத்திவைத்தாரென்பதிலிருந்து நன்கு தெரிகிறது. அம் மகிமை நாளிது வரை 'புலவர் பணம்' என்ற பெயரால் நடைமுறையில் இருந்துவருகிறது.

வள்ளல்சீதக்காதிஅவர்களைப் பெரிதும் பாராட்டிப் பாடியவர் படிக்காசுப் புலவர் ஆவார். இவருக்கும் வள்ளலாருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததென்பது இப்புலவர் பாடிய பாடல்களிலிருந்து விளங்குகின்றது. இப்புலவர் ஸதக்கத்துல்லாவலிஅவர்களுடன் நெருங்கிப் பழகி அன்புற்றிருந்தாரென்றும், இரகசியமாக ஈமான் கொண்டு இஸ்லாமானூர் என்றும் தமிழ்முஸ்லிம்கள் நம்பிவருகின்றூர்கள்.

நமச்சிவாயப் புலவர், கந்தசாமிப்புலவர் முதலியவர்களைப் பற்றி அதிக விவரம் தெரியவில்லை.

சீதக்காதியின் வள்ளன்மை

வள்ளல்சீதக்காதி தம் காலத்தில் பெரிய வள்ளலாய் விளங்கினூர். முக்கியமாகத் தமிழ்நாட்டிலுள்ள ஹிந்து முஸ்லிம் புலவர்களுக்குப் பொருள் முதலியவற்றைச் சலிக்காமல் அளவின்றி வழங்கிவந்தார். அதனுல், கீழக்கரையில் வள்ளலாரை அறிஞர், புலவர், பாவலர், நாவலர் அனைவரும் எப்பொழுதும் சூழ்ந்துகொண்டிருந்தனர். சீதக்காதிவள்ளல் தமிழ்ப்புலவர்களை ஆதரித்ததன் மூலம் தமிழுக்குப் புரிந்த சேவையையும், அதனுல் ஏற்பட்ட புகழையும்பற்றிப் புலவர் பலர் பாடிக்கொண்டேயிருந்தனர். அவர்காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் அவரிடத்துப் பரிசு பெருதவர் இல்லை எனக் கூறலாம். 'செத்துங் கொடுத்தான் சீதக்காதி' என்ற முதுமொழி ஒன்றே அவ்வள்ளலின் வண்மையையும் மாண்பையும் உலகில் உள்ள செல்வர், வறிஞர், பண்டிதர், பாமரர்எல்லாரும் அறிந்திருந்தனர் என்பதை விளக்கும். சீதக்காதிஅவர்களைப்

பற்றிப் பாடபபட்ட பாடல்களிலிருந்து அவர் கொடைச் சிறபபு நன்கு விளங்கும. நொணடி நாடகததில்வரும 'உரைப பருந் தமிழ்ப் பாவாணர்' எனற பாடலினல் வளளலார் 'தமிழபபாவாணர் உயிரையும், உலகத்து உயிரகளேயும, தீனவர் குலத்தையும காததவர்' எனபதை அறியலாம. ஆகலின, வளளல்களின வரிசையில சீதககாதிக்கு ஓர் சிறப பான இடமுணடு எனபதில் ஐயமிலலே.

சீதக்காதிவள்ளலின கொடைச் சிறபபைக காட்டும நிகழ்ச் சிகள பல உள. அவறறில் சிலவறறைக குறிபபிடுகிறேம.

வளளலாரை எபபொழுதும் புலவாகள சூழந்துகொணடு பாடிப பரிசில் பெறறு வநதனா. ஆனல், ஏழைமக்கள தம முன்னிலேயில் கூசாது வநது பொருள கேடகிறதிலலேயே எனற மனக்கவலே எப்பொழுதும வளளலாாமனத்தில் குடிகொண டிருந்தது. வறியோர்ககு எங்ஙனம கொடுபபது எனபது பறறிச் சிந்தித்துககொணடேயிருந்தார்.

அககால வழக்கபபடி வளளலாா ஊருக்கு வெளியே சென்று காலேக்கடனே முடித்துவருவாா. ஊரை அடுதது ஆமணக்குச் செடி அடர்ந்த காடு உணடு; அஙகுத்தான வளள லார் போய் வருவது வழக்கம. ஒருநாள நனகு வளர்நது உயர்ந்துநினற ஓர் ஆமணக்குச் செடியை உறறு நோககினர். அச் செடியின இலே அவர் பார்வையில் விழுந்தது. அந்த இலே மனிதன ஐந்து விரலகளே விரித்து ஏற்பதுபோல் அவ ருக்குத தோன்றியது. உடனே வளளலாருக்கு நெடுநாளாக இருநத மனக்கவலேயை நீக்கிக கொளள வழியும் பிறநதது. மறுநாள் காலேயில் வழககம்போல் ஊருக்கு வெளியே சென்ற வளளலாா கைநிறையப் பொற்காசுகளேக் கொண்டு சென்ருர். ஒவவோர் ஆமணக்குச்செடியின் இலே மீதும ஒரு பொறகாசை வைத்துககொணடே சென்ருர். இவ விவரம ஏழைமகக ளுக்குத் தெரிந்தது. அந்நாளமுதல ஏழைமககள வளளலார் காலேக்கடன முடிக்கச் செல்லும நேரததை நோக்கி நிறக லாயினர். வளளலார் சென்று திருமபிய பினனர் எளியோர் திரளாகப் போய் இலேயின மீது வைககபபட்ட பொற்காசுகளேப பொறுககிச் செலவராயினா. எனனே வளளலாரின கொடைச் சிறப்பு! அறிவு நுட்பம!

வள்ளலார் ஒருநாள் எண்ணெய் தேய்த்துக்கொண்டிருக்கும்போது ஒரு யாசகன் வீட்டு வாயிலில் வந்து பொருள் வேண்டினன். அவ்வமயம் வள்ளலாரின் மனைவியார் வீட்டு வேலைநிமித்தம் வேற்றிடத்தில் இருந்தார். யாசகனுக்கு வள்ளலார் யாதாயினும் கொடுக்க எண்ணினார். எதிரில் எண்ணெய் ஊற்றிவைக்கப்பட்டிருந்த தங்கக்கிண்ணந்தான் இருந்தது. வேறு பொருளைக் கொண்டுவரச் சொல்லாமல், அத் தங்கக்கிண்ணத்தையே பரிசளித்து அனுப்பினார். யாசகனும் பெரிதும் மனமகிழ்ந்து சென்றான். பிறகு, வள்ளலாரின் மனைவியார் வந்தார். நடந்ததை யறிந்து, யாசகனை வரவழைத்து, அக் கிண்ணம் தம் தாய்வீட்டார் அளித்த சீர் வரிசைகளில் ஒன்று என்று பெற்றுக் கொண்டு, அதற்குப் பதிலாக வேறொரு தங்கக் கிண்ணத்தைக் கொடுத்தனுப்பினார். இந் நிகழ்ச்சி வள்ளலாருக்குத் தெரியாது.

அவ்யாசகன் பேராசை கொண்டு மீண்டுமொரு நாள் வள்ளலாரிடம் பிச்சைக்கு வந்தான். அன்றும் வள்ளலார் எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் நேரமாக இருந்தது. முன் போலவே எண்ணெய் ஊற்றிவைக்கப்பட்டிருந்த தங்கக்கிண்ணத்தைக் கொடுக்க நேர்ந்தது. அப்போது, யாசகன் வள்ளலாரின் மனைவியார் பரிசை மாற்றிக் கொடுத்த விவரத்தை விளக்கமாகக் கூறினான். அது கேட்ட வள்ளல், 'அக் கிண்ணம் என் மனைவியினுடைய கொடை யாகும். இக்கிண்ணம் என் கொடை யாகும். ஆதலின், இதையும் பெற்றுக் கொள்' என்றார். யாசகனின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. வள்ளலாரை வாழ்த்திக்கொண்டே தங்கக் கிண்ணத்துடன் சென்றான்.

சீதக்காதி ஒருதடவை தமிழ்நாட்டில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவரை எங்கும் எப்பொழுதும் புலவர் பலர் சூழ்ந்துகொண்டே இருப்பார்கள். பிரயாணகாலத்தில் ஓரிடத்தில் வள்ளலார் தங்கியிருந்தபோது, புதுப் புலவர்கள் பலர் அவருடைய வள்ளன்மையைக் கேள்வியுற்று வந்து, பலவாறு புகழ்ந்து பாடித் தத்தம் தகுதிக்குத் தக்கவாறு பரிசு பெற்றுச் சென்றனர். அதனால், வள்ளலாரின்

புகழ் எங்கும் பரவியது. அப் பெருமையை அறிந்த ஒரு பாமரனுக்கு வள்ளலாரிடம் பரிசு பெற வேண்டு மென்ற ஆசை உண்டாயிற்று. பாட்டுடன் சென்றாலன்றிப் பரிசு பெற இயலாது என்று எண்ணி, ஒரு புலவரை அணுகி 'ஐயா, நீங்கள் எனக்காக வள்ளல் சீதக்காதியின் மீது ஒரு பாட்டைப் பாடிக் கொடுத்தால், அதை அவர்சபையில் பாடிப் பரிசு பெற்றுப் பிழைப்பேன், தயை புரிய வேண்டும்' என்று வேண்டி நின்றான். அப்புலவர் பாடிப்பாடி அலுத்துப் போயிருந்த நேர மாதலால், மனம் சலித்து, சிரமமின்றி,

"கன்னு பின்னு காடே மாடே
மன்னு தென்னு வரையா வள்ளால்"

என்று பாட்டை எழுதிக் கொடுத்தார்.

பாமரனும் அப்பாட்டை மனப்பாடம் செய்து கொண்டு, பல புலவர்முன்னிலையில் கொலுவீற்றிருக்கும் வள்ளலார் முன் சென்று அஞ்சாமல் அதைப் பாடினான். அப் பாட்டைக் கேட்ட புலவர்கள் எள்ளி நகையாடினர். ஒரு புலவருக்குச் சினம் பொங்கியது; உடனே எழுந்து 'இவன் உளறுகிறான்; இதற்குப் பரிசு அளிப்பது தகாது; இவன் நாத்துடுக்கு மாற ஒறுப்பதே நல்லது' என்று சொன்னார். மற்றொரு புலவர் எழுந்து, 'வள்ளலே, இவன்பாட்டு உளறல் அன்று; இதற்கு உயர்ந்த பொருள் உண்டு' என்று கூறிப் பின் வருமாறு விளக்கினார்.

'கன்னு—கன்னனைப் போல் இக்காலத்தில் வள்ளலாய் உள்ளவரே! பின்னு—வெற்றியில் அக் கன்னனுக்குப் பின் பிறந்த விசயனைப் போன்றவரே! காடேமாடே—காடு சூழ்ந்த நாட்டையும் செல்வத்தையும் பெற்றவரே! மன்னு—மன்னரே! தென்னு—தென்பாண்டிநாட்டவரே! வரையாவள்ளால்—எப் பொருளையும் எவர்க்கும் எப்போதும் அளவில்லாமல் கொடுப்பவரே! என்பது இதன் பொருளாகும் என்றார்.'

இப்பொருளைக் கேட்ட வள்ளலும் மற்றவரும் மனம் மகிழ்ந்தனர். அப் பாமரனும் தக்க பரிசு பெற்றுச் சென்றான்.

சீதக்காதிவள்ளல் தம் வாழ்நாள் முழுதும் வரையாது வழங்கியதற்குச் சான்று, 'செத்துங்கொடுத்தான் சீதக்காதி' என்னும் முதுமொழியேஆகும். இச் சொற்றொடர், அக் கொடையாளர்புகழுடம்பை என்றும் நிலைக்கச் செய்வதாகும். இதற்கேற்றதாக ஒரு கதை உண்டு. அதாவது:

வள்ளலார் மண்ணுலகைத் துறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்பு தாம் இறப்பது நிச்சயம் என்று உணர்ந்து, சுற்றத் தாரை நோக்கி, 'யான் இறந்தால் என் விரலில் அணிந்துள்ள மோதிரத்தைக் கழற்றலாகாது; மோதிரத்தோடு அடக்கஞ் செய்யவேண்டும்.' என்று கட்டளையிட்டிருந்தார்; பின்னர் அவ்வாறே சில நாளில் மௌத்தானார். அதை யறிந்த புரவலர் இரவலர் புலவர் முதலிய அனைவரும் துன்பக்கடலுள் ஆழ்ந் தனர். அவர்நல்லுடல் மார்க்கவிதிப்படி அடக்கம் செய்யப் பட்டது. சிறிதுகாலம் சென்றபின்னர், அவ்வள்ளலாரிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்த படிக்காசுப்புலவர் ஈழக் கரைக்கு வந்தார். இன்னுயிர்த் துணைவரான வள்ளலார் மாண்டதை யறிந்து மாளாத்துயரம் எய்தினார். பின்பு, வள்ள லாரின் சமாதியை அணுகிப் பலவாறு பாடிப் புலம்பினார்.

'காயற்றுறை சீதக்காதி, புகழ்க்கம்பம் நாட்டி, புலவரை ஓட்டாண்டிகளாக்கி, அவர்கள்வாயில் ஒரு பிடி மண் போட்டுத் தானும் சமாதிக்குழி புகுந்தான்; இனி, பொருளும் அறிவும் வளர வழியில்லை.' பூமகள், புவிமகள், நாமகள் இருந்தும் பய னில்லை. நாமும் இனி உயிருடன் இருத்தலிற் பொருளில்லை. வள்ளல் இறந்தவன்றே புலமையும் செத்தது' என்ற கருத் துக்களடங்கிய பாடல்களைக் கசிந்துருகிப் பாடினார். உடனே, 'யான் இறந்தாலும் என் ஈகை சாகவில்லை, என்னும் இறவாப் புகழின் தோற்றம் போன்று சமாதிக்குழி வெடிக்க, அதி லிருந்து மோதிரமிடப்பட்ட கை வெளியே தோன்றிற்று. அஃது, 'இம் மோதிரத்தைக் கழற்றி அணிந்து கொள்க' என்று வள்ளல் உணர்த்திய குறிப்பென்று புலவர் கருதி, அதை ஏற்று அணிந்து, 'கற்பகக் கையான் நம்மைக் கனிந் தழைத்திட்ட மோதிரமானது தமிழ்ச்சுவை யொன்று மறியாப் புல்லரிடம் போய், இனி எதையும் கைநீட்டிக் கேளாதே'

என்று இட்ட தடை போனதுள்ளது' என்னும் கருத்தமைந்த பாட்டைப் பாடினார். அன்றுமுதல் உலகத்தினர், வள்ளலாரின் பெருங் கொடையின் சிறப்பினைப் பாராட்டி, 'செத்துங் கொடுத்தான் சீதக்காதி' என்று கூறிவரலாயினர் போலும்!

இச் செய்தி எந்த அளவில் நம்பக்கூடியதென்பது புலப் படவில்லை. சமாதி வெடித்ததாகச் சிலர் நம்பலாம். ஆனால், இஸ்லாமிய முறைப்படி ஒரு மய்யித்தை (பிரேதத்தை) அடக்கம் செய்யும்போது, உடலிலுள்ள ஆடை ஆபரணங்களை யெல் லாம் கழற்றி அகற்றிய பின்னரே புதிதாகக் கபன் துணி வாங்கி மார்க்கவிதிப்படி உடுத்தி அடக்கஞ்செய்வது வழக்கம். மார்க்க முறைப்படி நடந்துவந்த அக்காலத்து மக்கள் மோதிரத்துடன் அவரை அடக்கம் செய்திருப்பார்கள் எனக் கொள்ள இட மில்லை. வள்ளலாரின் மய்யித்தை அடக்கஞ்செய்ய மார்க்கஞா னியர் பலர் வந்திருப்பர். ஆகையால், மார்க்கவிதிக்கு மாறாக, மோதிரத்துடன் அடக்கஞ் செய்யப் பட்டதென்று நம்புவதற்கு முடியவில்லை. இவ்வாறு கொள்வது அக்காலத்து மார்க்க விதிகளைக் கற்று, கற்றபடி நடந்து வரும் மக்களமீது பழி சுமத்துவதாகவும் ஆகிறது.

ஆகலின், படிக்காசுப்புலவர் பாடியதாகச் சொல்லப்படும் விருத்தத்தில் தமிழ்ப்புலவர்கள் கையாண்ட அலங்காரங் களுள் ஒன்று அமைந்திருப்பதாகக் கொள்ள வேண்டும்.

இராமச்சந்திரக் கவிராயர் பாடிய

ஏதிலே வறியவர்க்கு மினியகவிப் புலவருக்கு
மிரங்கி யந்தப்
போதிலே தனங்கொடுக்குந் தஞ்சைநகர்க் குருவப்ப
பூபனெற்குக்
கோதிலே கிடந்துழலும் பலரிடத்திற் சென்றுதமிழ்
கூறுவண்ணங்
காதிலே யொட்டிட்டுத் தாடையின்மோ தகக்கடுக்கன்
தானிட்டானே.''

என்ற செய்யுட் கருத்தும்,

நமச்சிவாயப் புலவர் பாடிய

காவொன் றுங் கைத்தலத்தண்ணல்செல்லூரன் கனிந்துநம்மை
வாவென் றழைத்திட்ட மோதிரமே வண்மை யான தமிழ்ப்
பாவொன் றுஞ் சற்று மறியாத புல்லர்தம் பக்கலிற்போய்த்
தாவென்று கையெடுத் தேற்காம விட்ட தடையிதுவே.

என்ற செய்யுளின் கருத்தும்

ஒரேமாதிரி அமைந்திருப்பதைக் காண்க. மேலும், இப் பாடலில் காணப்படும் 'செல்லூரன்' என்னும் வார்த்தை சீதக்காதிவள்ளலைத்தான் குறிக்கிறது என்பதற்குப் போதிய ஆதார மில்லை.

சீதக்காதி வள்ளலார் தம்மை யடக்கம் செய்யுமிடத்தில் யாதொரு க்கட்டடமும் கட்டக்கூடா தென்று கட்டளையிட்டிருந்தார். அவர் இட்ட கட்டளைக் கிணங்கி,நெடுநாள்வரையில் எவ்விதக்கட்டடமும் கட்டப்படாமல் இருந்தது. ஆனால், பிற்காலத்து மக்கள், 'நாள் செல்லச் செல்ல அவர் அடங்கியிருக்கும் இடம் அறியப்படாமற் போகுமே!' என்ற அச்சத்தினாலும் அன்பினாலும் அவ்விடத்தில் ஒரு சிறிய மதில் எடுத்திருக்கிறார்கள். ஆயினும், வள்ளலார் விருப்பத்தை மதித்துக் கூரை முதலியன வேயவில்லை. வள்ளலார் இவ்வாறு பணித்ததன் காரணம் என்னவெனில், உயிரோடு இருந்தகாலத்தில் இரப்பார்க்கு இல்லை யென்னாது ஈந்ததுபோலவே இறந்த பிறகும் அடங்கிய இடத்தில் யாதொரு தடையுமின்றி யாவரும் வரச் சௌகரியமாகவும், அவ்விடத்தில் உண்டாகிற புல், பூண்டு முதலியவைகளைப் பலஜீவராசிகள் வந்து தின்பதற்கு வசதியாகவும் இருக்க வேண்டுமெனக் கருதியதேயாகும். வள்ளலாரின் கொடையின் திறமும் மனப்பண்பும் இருந்த வாறென்னே! 'செத்துங் கொடுத்தான் சீதக்காதி' என்ற புகழ் இத்தகைய காரணத்தால் பொருந்து மெனலாம்.

மேலேகூறப்பட்ட பல ஆதாரங்களினால் சீதக்காதி தலைசிறந்தவள்ளலாய் விளங்கினாரென்பது நன்கு தெளிவாகின்றது.

'இல்லை' என்னாது பொருள் வழங்கிய வள்ளலார் ஒரு பெரிய தனவந்தராகவோ, அன்றி வணிகமன்னராகவோ இருந்



கீழக்கரையில் சீதக்காதியின் கல்லறை

திருக்கவேண்டும். இல்லையெனின், யாசகர்கள் கேட்ட பொருள்களை அளித்தற்கு மலைபோன்ற திரவியம் வேறு எவ்விதத்தில் வர முடியும்? ஆனால், வள்ளலுக்குப் பிறகு, அவர் குடும்பத்தினருக்கு எஞ்சிய செல்வம் வீடு, சிங்காரத் தோப்பு, நந்தவனம் ஆகிய இவைகளேயாம். அவ்வளவு பெரிய தனவந்தராயிருந்தவர் இவற்றைமட்டுந்தானா விட்டுப்போனார்? அதிகமாக விட்டுப்போயிருக்கவேண்டுமன்றோ? அல்லது, குடும்பத்தாருக்குப் பொருள்வருவாய்க்கு நிரந்தரமான வழி ஏதேனும் இருக்குமா? என்ற கேள்விகட்குச் சிலர் ஒரு காரணம் கூறுகின்றனர். வள்ளலாருக்குப் பச்சைக்கல் என்னும் மரகதம் செய்யும் விதம் தெரியுமென்றும், அதனால் அவ்வப்போது தமக்கு வேண்டிய செல்வத்தை அடைய முடிந்தது என்றும் சொல்லுவர். இன்றும் ஒருவகை மரகதத்திற்கு 'மரக்காயர் பச்சை' என வழங்குவதைச் சான்றாக எடுத்துக்காட்டுவர்.

வள்ளலார் செல்வம் பெற்றமைக்கு ஆதாரமாக வேறு ஒரு கதையும் கூறப்படுகிறது. அவருடைய பாய்மரக் கப்பலில் கொண்டு போன சரக்கை இலங்கையில் இறக்கிவிட்டுத் திரும்பும் போது, கனத்திற்காக அதில் மணல் ஏற்றப்பட்டதென்றும்,* அவருடைய நல்ல காலமாக அம்மணல் முழுவதும் மரகதம் கலந்திருந்ததென்றும், மேலும் மேலும் இலங்கையில் சரக்கை இறக்கிவிட்டுவரும் போதெல்லாம் மரகதம் கலந்த மணலை ஏற்றி வந்து எல்லையற்ற செல்வத்தை அடைந்தார் என்றும் கூறுகின்றனர். இச்செய்தி எவ்வளவு உண்மையென்று அறிய முடியவில்லை.

வள்ளலாரின் உறவினர்

வள்ளலாருக்குச் சகோதரர் இருவர் இருந்தனர். அவர்களுள், பட்டத்து மரக்காயர் என்ற முகம்மது அப்துல் காதிறு என்பவர் மூத்தவர். தம் தந்தைக்குப் பிறகு, அவர் இடத்திற்கு வர உரிமையுடையவர். அரசர்கள், பிரபுக்கள் ஆகியவர்களின் முதற்புதல்வருக்கு இளவரசர் என்ற பட்டம் கொடுப்பது போல, இவருக்கும் 'பட்டத்து இளவரசர்' 'பட்டத்துப் பிரபு'

*அவ்வாறு நிரப்புவதை ஞானம்போடுதல் என்பர்.

'பட்டத்து மரக்காயர்' என்ற சிறப்புப்பெயர்கள் வழங்கப்பட்டன வென்று தெரிகிறது. இவர் சீதக்காதிமரக்காயர் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கிற இடத்திற்கு மேற்கில் அடக்கஞ் செய்யப் பட்டிருக்கிறார். அச் சமாதியிடத்தில் வள்ளலாரால் பெரிய வில்மச்சு மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது.

ஷைகு இப்ருகிம் மரக்காயர், சீதக்காதி வள்ளலின் இளைய வராவர். இவர் இராமேசுவரத்திற் கருகிலும், மண்டபம் என்ற ஊருக்குக் கிழக்கிலும் உள்ள வேதாளை என்ற கிராமத்தில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இவர்சமாதியிடத்தும் வள்ள லாரால் ஒரு கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. இவற்றால், தமைய னாரும் தம்பியாரும் விண்ணுலகுக் கேகிய பின், சீதக்காதிப் பெருமான் இம் மண்ணுலகை விட்டு மறைந்தார் என்று தெரிகிறது.

சீதக்காதியாருக் குரிய ஆண்சந்ததிவிவரம் தெரியவில்லை. ஆனால், அவருடைய பெண்சந்ததியார் கீழக்கரையில் வசிக் கின்றனர். அவர்களுள், முஹியபித்தீன் அப்துல் காதிறு மரக்காயர் என்பவர் ஒருவர். இவர் வள்ளல்அவர்களின் இளையமகளின் நான்காம் தலைமுறையைச் சேர்ந்த ஒருவ ருடைய பெயர்த்தியின் பேரர் என்று கூறப்படுகிறது. வள்ள லாருடைய கல்வீடென்று வழங்குகிற ஆஸ்தானமாளிகை, சிங்காரத் தோப்பிலுள்ள பெரும்பகுதிகள் ஆகியவற்றை, வள்ளலாருக்குச் சந்ததிகள் இல்லாமையால் அவர் தமையனார் பட்டத்து மரக்காயரின் பெண்சந்ததியிலுள்ளவர்கள் நாளிது வரை உரிமையுடன் அனுபவித்து வருகிறார்கள்.

கீழக்கரையில் காணப்படும் ஞாபகச் சின்னங்கள்

கீழக்கரையில் முடிசூடாமன்னராய் விளங்கிய சீதக்காதி வள்ளலார் வாழ்ந்தகாலம் இற்றைக்குச் சற்றேறக் குறைய முந்நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் என்பது உறுதி. அவரது செல்வச்சிறப்பையும் உயர்ந்த வாழ்க்கையையும் அறிவதற்குக் கீழக்கரையில் இன்றும் சில சின்னங்கள் காணப்படுகின்றன,

கீழக்கரையில் சீதக்காதியின் தமையனார்

முகம்மது அப்துல் காதிறு மரக்காயருடைய கல்லறை

வலது பாகத்தில் சீதக்காதியின் கல்லறையும் சேர்ந்திருக்கிறது

கீழக்கரையில் சீதக்காதியின் அத்தாணி மண்டபம்
இன்றைய நிலை

அரணமனை போனற ஒரு கல்வீட்டில வளளலார் வாழந திருந்தார். உமறுபபுலவர் ஒருபாலும், கநதசாமிப்புலவர் மறறொருபாலும், கடல கடநது பொருளீட்டும வணிகர் வேறொருபாலும அமாநதிருகக, வளளலார வநதவாக கெல லாம வரையாது வழஙகுமபோது வீறறிருநத அத்தாணி மண டபத்தின ஒரு பாகத்தை இனறும காணலாம. வளளலார வாழநத வீட்டிலிருநத கிணறுகள இனனும இருககினறன.

நாளதோறும் நடககும உலகவியவகாரஙகளைக் கவனித்த பினனர், சிறிது ஓயவு பெற வேணடி, தமமூரிலிருந்து ஒரு மைல தூரத்தில் ஒரு சிஙகாரத் தோபபு அமைததிருந்தார். வனப்பு வாய்நத அத்தோபபை இனறும காணலாம.

இவையனறி, தமையனார் அடககம் செயயபபட்ட இடத் திலும், தமபியார் அடக்கம செயயபபட்ட இடத்திலும், ஸதக் கததுல்லா வலி அவர்கள அடக்கம செயயபபட்ட இடததிலும் வளளலாரால் கட்டபபடட கட்டடஙகளை இனறும காணலாம.

கல்லால் கட்டபபட்ட குத்பாபபளளியும் நின்று நிலவுகிறது.

வளளலார் அடக்கம செய்யபபட்ட இடத்தில ஒரு விதக் கட்டடமும இல்லை. காரணம், வளளலார் வேணடிக் கொண்ட தேயாகும்.

பழையகுத்பாப்பளளியில், வளளலாருடைய தாயைப் பெற்ற பாட்டனா வாவாலி மரக்காயரும, தந்தையாா மவ்லா சாகிபு என்ற பெரிய தமபி மரககாயரும அடககம செயயப் பட்டிருககின்றனர்.

முடிவுரை

மேற்கூறியவாறு, சீரும சிறப்பும் பேரும பெருமையும பெற்று, தென்னாட்டு முஸலிமகளுள வளளல்தன்மையில் சிறந்து, தமிழை வளர்த்த பெருமான என்று உலகம புகழ வள்ளல் சீதககாதி வாழந்திருநதாா.

BIBLIOGRAPHY

Abidhanakosam by A. Muthuthambi Pillai, 1902.

al-Faruq by Shamsul Ulama Mawlana Shibli.

Alwar Kala Araichi by Rao Sahib M. Raghavaiyangar.

Arab Geographers' Knowledge of Southern India by Dr. S. M. H. Nainar.

Book of Ser Marco Polo, The, Translated and edited with notes by Colonel Sir Henry Yule, Vol II. 1903.

Castes and Tribes of Southern India by Thurston Vol. V.

History of Arabs by Philip K. Hitti.

History of Aurangzeb, Vol. V. by J. Sarkar.

History of Gingee by C. S. Srinivasachari.

History of Kerala by K. P. Padmanabha Menon.

History of Gujarat by M. S. Commissariat.

History of the Nayaks of Madura by R. Satyanatha Aiyar, 1924.

Ibn Battuta's Travels in Asia and Africa,—English Translation by H. A. R. Gibb.

Islamia Nesan - December, 1909.

Ithaf-al-Sadat-al-Muttaqin by Murtaza Zubiadi.

The Indian Antiquary - Journal of Oriental Research, Bombay, Vol. XLVI - 1917.

The Journal of Oriental Research, Vol III, Madras.

Kanzul Karamat - by Ghulam Qadir Navalar.

Kitab Nukhbat al-Dahr fi Ajaib al-Barr wal Bahr by Dimishqi.

Madras Diary and Consultation Book, 1686, 1687 & 1690.

Malabar Manual by Logan,

The Mameluke or Slave Dynasty of Egypt by Sir William Muir.

Madras Tercentenary Commemoration Volume, 1939.

Manual of the Administration of the Madras Presidency Vol. III 1893.

Mediaeval India by Stanley Lane Poole.

Muntakhab-al-Lubab by Khafi Khan.

A Political and Genernal History of the District of *Tinnevelly* by Right Rev. R. Caldwell.

Ramnad Manual.

South Arcot District Gazetteer.

South Arcot District Manual

Short History of the Saracens by Sir Syed Ameer Ali.

Tarikh-i-Rashiduddin
Tarikh-i-Wasaff } Elliot and Dowson, Vol III.

Tinnevelly District Gazetteer

Tuhfat-al-Mujahidin English Translation by Dr. S. M.H. Nainar, Madras University, 1942.

Van Pukazh Kayalpattanam Charithiram by M. K. Sayyid Ahmad, 1951.

Al-Qasidat al-Witriyya 1323 A. H.

Tamil Lexicon, Madras University.

A Dictionary of Islam by T. P. Hughes 1895.

A Dictionary of Urdu, Classical Hindi and English by J. T. Platts.

Atlas of India W. and A. K. Johnston, 1894.

Atlas of the Madras Presidency, Madras Central Survey Office, 1928.